வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 05 13.11.2023 திங்கட்கிழமை இதழ் : 337 பக்கங்கள் : 12

## பலத்த எதிர்பார்ப்புக்கு மத்தியில்
# இன்று பட்ஜெட்!
## ஜனாதிபதி ரணில் சமர்ப்பிக்கிறார்



கொழும்பு, நவம்பர் 13

**2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட அறிக்கை இன்று திங்கட்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நிதியமைச்சர் என்ற வகையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.**

வரவு - செலவுத்திட்டத்தின் இறுதிக்கட்ட தயாரிப்பு மற்றும் சமர்ப்பிப்பு தொடர்பாக தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி நேற்று காலை கலந்துகொண்டார்.

நிதி இராஜாங்க அமைச்சர்களான ரஞ்சித் சியம்பலாபிட்டிய, ஷெஹான் சேமசிங்க, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட

11



## ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று விசேட தீபாவளி கொண்டாட்டம்

கொழும்பு, நவ. 13

உலகெங்கிலும் உள்ள இந்துக்களால் கொண்டாடப்படும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை ரணில் விக்கிரமசிங்க தலைமையில் விசேட தீபாவளி கொண்டாட்ட நிகழ்வு இடம்பெற்றது.

ஜனாதிபதி அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த கொண்டாட்டம் இந்து சம்பிரதாயங்களுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டு மிகவும் எளிமையாகவும் நேர்த்தியாகவும் நடைபெற்றது.

11

## யாழில் செவிப்பாறை கிழிய தாக்கப்பட்டார் மாணவன்!
### 4 மாணவர்களுக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், நவ. 13

யாழ் நகரில் 13 வயதான மாணவனின் செவிப்பறை பாதிக்கப்படும் வகையில் தாக்கிய 4 மாணவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைதான நால்வரும் யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் சிறுவர் சீர்திருத்த பாடசாலையில்

11

## பெரிய சம்பள உயர்வை எதிர்பார்க்க வேண்டாம்!
### அரச ஊழியர்களுக்கு கூறுகிறது பெரமுன

கொழும்பு, நவ. 13

அரச உத்தியோகத்தர்கள் பெரிய சம்பள உயர்வை எதிர்பார்க்க வேண்டாம் என பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் 2024ஆம் ஆண்டில் பெரிய பொருளாதார மறுமலர்ச்சியை எதிர்பார்க்க முடியாது

11

## வங்க கடலில் புயல் உருவாக வாய்ப்பு!

சென்னை, நவ. 13

வங்கக் கடலில் நாளை காற்றழுத்த தாழ்வு பகுதி (புயல் சின்னம்) உருவாகக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சென்னை வானிலை மையம் வெளியிட்ட அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

“வடகிழக்குப் பருவ மழை காலத்தில்

11

## இலங்கையில் ஜனநாயகத்துக்கு பேராபத்து!
### இத்தாலியில் கூறினார் கர்தினால் மல்கம்

வத்திக்கான், நவ. 13

இலங்கை அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மற்றும் சந்தேகிக்கப்படும் நபர்கள் மீது குற்றஞ்சாட்டுவதற்கான அதிகப்படியான அதிகாரங்கள் வழங்கப்படுவது மிகுந்த வருத்தத்தை அளிப்பதாகவும் இது பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டங்கள் நீதி மற்றும் ஜனநாயகத்திற்கு உண்மையான ஆபத்தை விளைவிக்கக் கூடியவை எனவும் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

அண்மையில் வத்திக்கானில் நடைபெற்ற திருத்தந்தையுடனான ஆயர்கள்

11

## அம்பாந்தோட்டை துறைமுகத்தால் அரசுக்கு இலாபம் எதுவும் இல்லை!
### நிமல் சிறிபால டி சில்வா கூறுகிறார்

கொழும்பு, நவ. 13

அம்பாந்தோட்டை துறைமுகத்தில், இலாபம் பெறும் நோக்கில் பல வேலைத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளதாக துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

11

## தேசிய தீபாவளியை முன்னிட்டு நேற்று வவுனியாவில் தபால் தலை வெளியீடு!

வவுனியா, நவ. 13

தேசிய தீபாவளி தினத்தை முன்னிட்டு வவுனியாவில் தபால் முத்திரை வெளியிட்டு வைக்கப்பட்டது.

வவுனியா, கந்தசாமி ஆலய பிரதான மண்டபத்தில் நேற்று மாலை இடம்பெற்ற தேசிய தீபாவளி நிகழ்வில் வைத்து குறித்த

11



## முல்லைத்தீவு புலிபாய்ந்தகல் கடல் நிலப் பகுதிகளை அபகரிக்க திட்டம்

முல்லைத்தீவு, நவ. 13

முல்லைத்தீவு மாவட்டம் கரைத்துறை பற்று பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கொக்கிளாய் வடக்குக்கும் நாயாறுக்கும் இடைப்பட்ட புலிபாய்ந்தகல் பகுதியின் தரை மற்றும் கடற்பகுதிகளை அபகரிப்பதற்கான திட்டங்கள் முழு வீச்சில் இடம் பெற்று வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் ஊடகவியலாளர் குழு ஒன்று குறித்த பகுதிக்கு சென்று பார்வையிட்ட போதே அப்பகுதி மக்கள் தமது ஆதங்கங்க ளை முன்வைத்தனர் .

குறித்த சம்பவம் தொடர்பில் அப்போது மக்கள் கருத்து தெரிவிக்கையில்-

பரம்பரை பரம்பரையாக குறித்த கடற் பகுதியில் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர் .

இந்நிலையில் தென் இலங்கையைச் சேர்ந்த மீனவர்கள் சுமார் நான்குக்கு மேற்பட்ட வாடிகளை

11

# இப்படியும் நடக்கிறது

யுத்தம் நடந்துகொண்டிருந்த அந்தக் காலத்தில் நடந்த சம்பவம் ஒன்றை ஓர் அரசியல்வாதி அண்மையில் தெரிவித்ததுதான் இப்போது ஞாபகத்திற்கு வருகின்றது.

விடுதலைப் புலிகள் மிகப் பெரிய தாக்குதல் எதனையும் நடத்தி அதன்மூலம் சிங்கள மக்களுக்கு மிகப்பெரிய இழப்புக்கள் ஏற்பட்டுவிட்டால், உடனே அரசாங்கம், அந்தச் செய்திகள் சிங்கள மக்கள் மத்தியில் சென்றடைந்து மக்கள் பெரும் கிளர்ச்சி எதனையும் செய்துவிடக்கூடாது என்பதில் கவனமாக இருந்ததாம்.

அப்படி எங்காவது புலிகள் தாக்குதல் நடத்தினால் உடனே, இலங்கை கிரிக்கட் அணி உலகக் கோப்பையை வென்ற கிரிக்கெட் போட்டியின் கடைசி ஆட்டத்தை இலங்கையிலுள்ள அனைத்து தொலைக்காட்சிகளிலும் ஆகக்குறைந்தது அரச தொலைக்காட்சிகளிலாவது மறுஒளிபரப்பு செய்ய ஏற்பாடு செய்துவிடுவார்களாம்.

அதாவது அதனை மறு ஒளிபரப்பு செய்தால், மக்கள் அதனைப் பார்த்து ரசித்துக் கொண்டிருப்பார்களே தவிர வேறு எதனைப்பற்றியும் சிந்திக்கமாட்டார்களாம்.

அதேபோலத்தான், புலிகளும் அப்படி ஏதாவது முக்கிய கிரிக்கெட் போட்டிகள் நடக்கின்ற போது இராணுவத்தளங்களை தாக்குவதற்கும் அந்த தினத்தை தெரிவு செய்திருக்கின்றனர் என்கிறார் முன்னாள் புலிப் போராளி ஒருவர்.

ஏனெனில் முகாமிலுள்ள படையினர் அனைவரும் போட்டிகளை பார்த்துக்கொண்டிருப்பார்கள். ஆகக்குறைந்தது காவலரண்களில் நிற்பவர்கள்கூட வானொலிகளில் போட்டி வர்ணனைகளைக் கேட்டுக்கொண்டிருப்பார்கள். அந்த நேரத்தில் அவர்களின் கவனம் திசை திரும்பியிருக்கும்போது தாக்குதல் நடத்துவது சுலபம் என்கிறார் அவர்.

இவற்றையெல்லாம் இங்கே குறிப்பிடுவது, கிரிக்கட் இலங்கையில் எவ்வளவு முக்கியமானது என்பதை குறிப்பதற்காகவே. அது நமக்கு - அதாவது தமிழ் மக்களுக்கு அவ்வளவு முக்கியமானது அல்ல என்றாலும், அது சிங்கள மக்களைப் பொறுத்தவரை அவர்களோடு, அவர்களின் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்து இருக்கின்றது.

அத்தகைய கிரிக்கட்தான் இப்போது அரசியலிலும் பேசுபொருளாகியிருக்கின்றது.

எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதோ, அல்லது பால்மாவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதோ கூட சாதாரண சிங்கள மக்களுக்கு பெரிய பிரச்னை இல்லாமல் இருக்கலாம் ஆனால் சிறிலங்கா அணி அடுத்த உலகக் கிண்ண போட்டிகளில் விளையாடவே முடியாத நிலை ஒன்று ஏற்படுமானால், அதுவும் அரசியல்வாதிகளால் ஏற்படுமானால் அவர்கள் அதனைப் பொறுத்துக்கொள்ளப்போவதில்லை என்கிறார் சிங்கள ஊடக நண்பர் ஒருவர்.

கிரிக்கெட் சபையில் தற்போது நடக்கின்ற இழுபறிகள் எல்லாம் விளையாட்டு அமைச்சருக்கும், ஜனாதிபதி செயலகத்திலுள்ள முக்கிய அதிகாரி ஒருவருக்கும் இடையிலானது தான். அந்த அதிகாரியும் அரசியல்வாதிதான் ஆனாலும் இப்போது அவர் அங்கு ஓர் அதிகாரி. ஏற்கனவே அவருடன் பல அரசியல் 'தலை'களுக்கு இடையிலான மோதல்கள் அதிகரித்து, அது கட்சியையும் அரசையும் பல தடவைகள் நெருக்கடிக்குள் தள்ளியிருக்கின்றது.

இப்போதும் நடந்துகொண்டிருப்பது அதுதான். தற்போதைய கிரிக்கட் சபையின் நிர்வாகத்தை மாற்றியமைக்காவிட்டால் சிறிலங்கா கிரிக்கட்டை காப்பாற்ற முடியாது என்று விளையாட்டுத்துறை அமைச்சர் நம்புகின்றார். அதற்காக அவர்களை வெளியேற்றிவிட்டு புதியவர்களை தெரிவுசெய்வதற்கு வசதியாக கிரிக்கெட் சபையை மறுசீரமைக்க முன்னாள் கிரிக்கெட் கப்டனும் அரசியல்வாதியுமான அர்ஜூன ரணதுங்கவை நியமித்தார் அமைச்சர். ஆனால் தற்போதைய சபைக்கு ஆதரவாக இருக்கும் அந்த அதிகாரி, அதற்கு எதிராக அவர்களைத் தூண்டிவிட்டு அர்ஜூனவின் நியமனத்திற்கு, மேல்நீதிமன்றம் ஊடாக இடைக்காலத்தடையை பெற்றிருக்கின்றனர்.

இதனால் இந்த விவகாரம் இன்று அரசியல் மயப்பட்டிருக்கின்றது.

அதுவல்ல பலரையும் புருவத்தை உயர்த்த வைத்திருப்பது, இவ்வளவு விரைவாக இலங்கை கிரிக்கெட் சபைக்கு சர்வதேச கிரிக்கெட் சபை ஏன் அவசரமாக இடைக்காலத் தடையை விதித்தது என்பது அறியாமல் உலகம் எங்கும் கிரிக்கெட் ரசிகர்கள் தலையைப் பிய்த்துக் கொண்டிருக்கின்றனர்.

தென்னாபிரிக்காவில் அந்த நாட்டின் அதிபர் நியமித்த ஆலோசனைச்சபைதான் அந்த நாட்டின் கிரிக்கெட் சபையை நிர்வகிக்கின்றது. அதிகம் ஏன்? ஆப்கானிஸ்தான் கிரிக்கட் சபையை தலிபான்கள் நிர்வகிக்கவில்லையா? கிரிக்கெட்டில் அரசியல் என்று இலங்கையை மட்டும் அவசரம் அவசரமாக தடைசெய்திருப்பது ஏன் என்பது புரியவில்லை.

ஐசிசி என்ற சர்வதேச கிரிக்கெட் சபை என்பது இன்று இந்தியர்களின் கைகளில் இருப்பதும் ஒன்றும் இரகசியமானதல்ல. ஆசிய கிரிக்கட் சபையின் தலைவராக இருக்கும் இந்தியரான ஜெய் ஷா, அங்கு பலம்பொருந்திய நபராக கருதப்படுபவர். அவருக்கும் இலங்கையின் கிரிக்கட் சபையின் தலைவர் ஷம்மி சில்வாவுக்கும் இடையிலான உறவும் பகிரங்கமானவை.

எது எப்படியோ இந்த நெருக்கடியிலிருந்து ஜனாதிபதி வெளியே வரவில்லை என்றால், அது அவருக்கு நல்லதல்ல என்கின்றார் தெற்கு ஊடகர் நண்பர் ஒருவர்.

-ஊர்க்குருவி.

# வரலாற்று சிறப்பு மிக்க வல்லிபுர ஆழ்வார் தீபத்திருநாள் நரகாசுர சங்கரர் பூசைகள்

வடமராட்சி, நவ. 13

வரலாற்று சிறப்பு மிக்க வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய தீபத்திருநாள் சிறப்பு நரகாசுர சங்கரர் பூசைகள் நேற்று ஞாயிறுபிற்பகல் 4:30 மணியளவில் வசந்த மண்டப பூசைகளுடன் ஆரம்பமாகி வல்லிபுரத்து ஆழ்வார் பரிவாரங்களுடன் உள் வீதி வலம் வந்து மேற்கு பக்க மூலையில் நரகாசுர சங்காரம் இடம் பெற்றது.

ஆலய பிரதம குரு கணபதீஸ்வரக் குருக்கள் தலைமையில் இடம்பெற்ற சிறப்பு பூசைகளில் வடமராட்சியிலிருந்து நூற்றுக்கணக்கான அடியார்கள் கலந்துகொண்டனர். (அ-2)



# ரணில் - ராஜபக்ஷ அரசை விரட்ட அணிதிரள்வோம்!

## தேசிய மக்கள் சக்தி அறைகூவல்

கொழும்பு, நவ. 13

"ரணில் - ராஜபக்ச அரசு இனியும் ஆட்சியில் தொடர மக்கள் அனுமதிக்கக்கூடாது. இந்த அரசை விரட்டியடிக்க மக்கள் அனைவரும் தேசிய மக்கள் சக்தியின் பின்னால் அணிதிரள வேண்டும். புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களும் தேசிய மக்கள் சக்தியின் கரங்களைப் பலப்படுத்த வேண்டும்."

- இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.



அவர் மேலும் கூறுகையில், "ராஜபக்சக்களைப் பாதுகாக்கும் நோக்குடன் ஜனாதிபதி ஆசனத்தில் அமர்ந்த ரணில் விக்கிரமசிங்க இன்று செய்வதறியாது திக்குமுக்காடுகின்றார். அரசியலிலும், விளையாட்டிலும் ஊழல், மோசடியாளர்களைப் பாதுகாக்க முற்படும் ரணில், தானும் ஒரு ஊழல்,மோசடியாளன் என்பதை மறந்து விட்டார் போல்.

ரணில் - ராஜபக்ச அரசை விரட்டியடிக்க அனைத்து மக்களும் தேசிய மக்கள் சக்தியின் பின்னால் அணிதிரள வேண்டும்." - என்றார்.(அ)

# சுழலும் உணவகம் கொழும்பில் டிசெம்பர் மாதம் திறக்கப்படும்!

கொழும்பு, நவ. 13

தெற்காசியாவின் முதலாவது சுழலும் உணவகம் கொழும்பில் உள்ள தாமரை கோபுரத்தின் 27 ஆவது மாடியில் அடுத்த மாதம் திறக்கப்படவுள்ளது.

கொழும்பு தாமரைக் கோபுர நிர்வாக நிறுவனத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்துக்கமைய, தாமரை கோபுரத்தின் மூன்று தளங்களை நிர்வகிப்பதற்கான அனுமதியை தனியார் நிறுவனமொன்று பெற்றுள்ளது.

குறித்த நிறுவனம் தாமரைக் கோபுரத்தின் 26ஆவது மாடியில் இரண்டு விருந்து பசார அரங்குகளை நிர்வகிக்கவுள்ளதுடன், 25 ஆவது மாடியை வேறு சில பொழுதுபோக்கு அம்சங்களுக்காக பயன்படுத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுழலும் உணவகத்தில் ஒரே தட வையில் 225 விருந்தினர்கள் தங்க முடியும் எனவும் சர்வதேச உணவு களின் உண்மையான சுவைகளை வழங்குவதற்கு, வெளிநாட்டு சமையல் நிபுணர்களை பணியமர்த்தவுள்ளதாகவும் குறித்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இந்த சுழலும் உணவகம் தினமும் நண்பகல் 12 மணி முதல் நள்ளிரவு வரை திறந்திருக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# புத்தளம் - கொழும்பு ரயில் சேவை மீண்டும் ஆரம்பம்

கொழும்பு, நவ. 13

புத்தளம் - கொழும்பு பயணிகள் ரயில் போக்குவரத்து சேவைகள் எட்டு நாட்களின் பின்னர் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக புகையிரத கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

புத்தளம் - கொழும்பு ரயில் மார்க் கத்தின் பத்துளு ஓயா பிரதேசம் வெள்ளத்தினால் மூழ்கியதன் காரணமாக கொழும்பு - புத்தளம் வரையிலான ரயில் சேவைகள் கடந்த 4ஆம் திகதிமுதல் பங்கதெனிய ரயில் நிலையம் வரை மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

பத்துளு ஓயா ரயில் நிலையம் மற்றும் ரயில் தண்டவாளம் அதனை அண்டிய ரயில் தண்டவாளம் பிரதான வீதி உள்ளிட்ட பகுதிகளில் வெள்ள நீர் காணப்பட்டது.

ரயில்வே திணைக்கள ரயில் பாதையை சுத்தப்படுத்தும் ஊழியர்களால் தண்டவாளத்தில் காணப்பட்ட வெள்ளநீர் வெளியேற்றப்பட்டு, ரயில் பாதை சீரமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் இன்று திங்கட்கிழமை முதல் புத்தளம் ரயில் நிலையம் முதல் கொழும்பு கோட்டை ரயில் நிலையம் வரையிலான அனைத்து ரயில் சேவைகளும் வழமை போல நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

யாழ்.நகரில் காணி உடன் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் 3½ பரப்புக் காணி, இரண்டு வெட்டுக் கிணறுகளுடன் உடன் விற்பனைக்குண்டு. இந்தக் காணி சுண்டுக்குழி தபால் நிலையத்துக்கு அருகில் - கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ளது. 55 மில்லியனுக்கு (5 கோடியே 50 லட்சம்) மேலான விலை எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்புகளுக்கு : +447963743585 (Whatapp), 0212227141(Sri Lanka)

மின்னஞ்சல் : Jamesraj_uk@yahoo.co.uk

ஈழநாடு
Eelanadu 13.12.2023 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், ஐப்பசி 27

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# முற்றிலுமான அரசியல் தீர்விற்கான சாத்தியம்?

இரா.சம்பந்தன் தீபாவளி தினச் செய்தியை வெளியிட்டிருக்கின்றார் – கூடவே அரசியல் தீர்வுக்கான ஜனாதிபதி ரணிலின் செயல்பாடுகள் நம்பிக் கைக்குரியதாக இல்லையென்றும் கூறியிருகின்றார். சம்பந்தன் கடந்த காலத்தில் – அவ்வப்போது தீபாவளிக்கு முன்னர், சித்திரை வருடத்திற்கு முன்னர் – அரசியல் தீர்வு தொடர்பான ஆரூடங்களை கூறியதுண்டு. இந் தப் பின்புலத்தில் இப்போதும் தீபாவளி தினத்தில், அரசியல் தீர்வு தொடர் பில் பேசியிருக்கின்றார். ஆனால் சம்பந்தன் அவரது அரசியல் வாழ்வின் இறுதிக்காலத்திலாவது, தனது தவறுகளை விளங்கிக் கொள்வதாக தெரிய வில்லை.

மீண்டும் முன்னைய தவறான நம்பிக்கைகளையே மீண்டும் முன் வைக்கின்றார். ஒன்றை அடைவதற்கான வழிகளை அறியாமல் – கிளிப் பிள்ளை போன்று, முன்னர் கூறியதையே மீண்டும், மீண்டும் கூறுவதா னது, ஒன்றில் சம்பந்தன் முற்றிலும் அறிவை இழந்துவிட்டார் என்பது பொருள் – அல்லது, அவருக்கு அரசியல் தீர்வை நோக்கி படிப்படியாக முன்னேறுவது தொடர்பில் எவ்வித அக்கறையும் இல்லை என்பதாகும்.

2005இல், ஆட்சி மாற்றம் ஏற்பட்ட போது, படிமுறை சார்ந்து அரசியல் தீர்வு நோக்கிச் செல்வதற்கான வாய்ப்பு கிடைக்கப்பெற்றது. ஆனால், சம்பந்தனோ நடக்க முடியாத ஒன்றைப் பற்றியே கூறிக்கொண்டிருந்தார். அதாவது, புதிய அரசியல் யாப்பு ஒன்றின் மூலம், முழுமையான அரசியல் தீர்வொன்றை அடைவது. ஆனால் நடைமுறைக்கு சாத்தியமானதல்ல என்பதை பலரும் உணர்ந்திருந்த போதிலும் கூட, அதனை பொருட்படுத்து வதற்கு சம்பந்தன் தயாராக இருக்கவில்லை. ஆனால் இறுதியில் ஆட்சி மாற்றத்திற்கு, தமிழ் மக்கள் ஆதரவளித்தும் எதுவும் நடக்கவில்லை. நம்பினோம் ஏமாற்றிவிட்டார்கள் என்றவாறான பழைய கதையுடன், சம்பந்தன் வழமைபோல் விடயங்களை முடித்துக் கொண்டார். இது மிதவாத அரசியல்வாதிகளின் வாழையடி வாழை.

இலங்கைத் தீவை பொறுத்தவரையில் – முழுமையானதொரு அரசி யல் தீர்வு தமிழ் மக்களுக்கு கிடைப்பதற்கான வாய்ப்பு அதிசயமானது. அதிசயங்கள் நிகழ்தால் ஒழிய வேறு எந்தவொரு வழியும் இல்லை. ஆனால் அவ்வாறானதோர் அதியசம் நடக்கும் வரையில் தமிழ் மக்களின் இருப்பே முற்றிலுமாகவே கேள்விக்குள்ளாகிவிடும். இந்த நிலையில், அரசியல் தீர்வு ஒன்றை அடைய முடியுமென்றால் – அது படிமுறை சார்ந்த ஒன்றாகவே இருக்க முடியும். ஏனெனில், அரசியல் தீர்விற்காக பேரம் பேசக் கூடிய பலத்துடன் விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டுமே இருந்தது.

ஆனால், அவர்கள் அரசியல் இலக்கை விட்டுக் கொடுப்புக்களற்ற ஒன் றாக புரிந்து கொண்டனர். இதன் காரணமாக அவர்களை அழிப்பது, இலங்கை அரசுக்கு இலகுவானது. இந்தப் பின்புலத்தில் நோக்கினால், சம்பந்தன் போன்ற ஒருவரது தலைமையின் கீழ் பேரம் பேசவே முடியாது. இந்த இடத்தில்தான், இந்திய – இலங்கை ஒப்பந்தம் மீண்டும் முக்கியத்து வம் பெறுகின்றது. ஏனெனில் அது ஒன்றுதான் ஈழத் தமிழர்களுக்கு சாதகமாக இருக்கின்றது. அதன்மூலம் கிடைக்கப்பெற்ற 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துங்கள் என்னும் கோரிக்கையிலிருந்து தான், ஈழத் தமிழர்களுக்கான அரசியலை முன்னோக்கி நகர்த்த முடியும்.

இதனை சம்பந்தனால் புரிந்து கொள்ள முடியவில்லை. இதனை புரிந்து கொண்டிருந்தால், இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் சமஷ்டித் தீர்வை வலியுறுத்தி கடிதம் அனுப்பியிருக்கமாட்டார். இலங்கைத் தீவின் அரசியல் யதார்த்தத்தைப் பொறுத்தவரையிலும், இலங்கைத் தீவின் மீது மென் அழுத்தங்களை பிரயோகித்துவரும் இந்திய, அமெரிக்க தரப்புக் களின் அணுகுமுறையை பொறுத்தவரையிலும் – ஈழத் தமிழ் மக்க ளுக்கான முழுமையான அரசியல் தீர்வொன்றை பெறுவது எட்டாக் கனியாகும்.

## வடமாகாண மரநடுகை மாதம்

**கார்த்திகை - 2023**



*“மரங்களின் பிரதான தொழிற்பாடுகள் புரிந்துகொள்ளப்பட் டு அவை உயிர்வாழ் அங்கிகளாக எம்மால் உணரப்பட்டால், அவை எமக்கு ஆதாயமும் அகமகிழ்வும் தரக்கூடிய என்றும் முடிவில்லாத வளமாக விளங்கும்.”*

**நி.தி.மிரோவ் (அமெரிக்க எழுத்தாளர்)**

# ஆசியாவிலேயே கேவலம் கெட்ட நாடாக இலங்கை

## கஜேந்திரன் எம்.பி. காட்டம்

*முல்லைத்தீவு, நவ. 13*

ஆசியாவிலேயே கேவ லம் கெட்ட ஒரு நாடாக இலங்கை வந்திருக்கின்ற தென்றால் ஆட்சியாளர்க ளின் மனநிலை தான் அதற்கு காரணம் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு - மல்லாவி பகுதியில் இடம்பெற்ற நிகழ் வொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்-

எங்களுடைய இனம் கிட் டத்தட்ட நாங்கள் படித்த வரலாறுகளின் படி 5000 வருடங்களாக அடிமைக ளாக இருந்திருக்கின்றோம். இன்றும் அடிமைகளாக தான் இருக்கின்றோம், நாங்கள் எல்லோரும் கௌர வமான அடிமைகள்.

ராவணன் ஓர் தமிழ் மன்னன், ஆரியர்களினால் அவரின் சாம்ராச்சியம் அழிக்கப்பட்டது என்ப தும், அவர் அரக்கராக சித் திரிக்கப்பட்டார் என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள் ளது.

அன்றைய கால கட்டத் தில் கடவுள் நம்பிக்கை யோடு சேர்த்து அரக்கர்கள் என்று சொல்லப்பட்டது,

இன்றைய நவீன கால கட்டத்தில் விடுதலைப் போராட்டம், நியாயமான உரிமைப் போராட்டம், அது வும் ஒரு சமூகத்துக்காக குரல் கொடுக்கின்றவர்கள் பயங்கரவாதிகளாக சித்தி ரிக்கப்பட்டு அழிக்கப்பட்ட வரலாறுகளும் இடம் பெற்றிருக்கின்றது.

அந்த வகையில் நீங்கள் அந்த இருட்டடிக்கப்பட்ட வரலாற்றை திருப்பி காட் டியிருக்கிறீர்கள்.

இருட்டடிக்கப்பட்ட எமது வரலாறுகளை மீண்டும் நேர் நிறுத்தி எமது இளைய சமுதாயத்திற்கு ஒரு நல்ல வழிகாட்டிகளாக நீங்கள் இருக்க வேண்டும்.

ஒரு காலத்தில் இலங்கை போன்று வரவேண்டும் என்று சிந்தித்த சிங்கப்பூர் இன்று உலகில் மிக முன் னேறிய ஒரு நாடாக இருக் கின்றது. இலங்கையில் படித்தவர்கள் நிறைய பேர் அந்த நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஆனால் இங்கே வாழமுடி யாமல் நாங்கள் ஓடிக் கொண்டிருப்பதற்கு கார ணம் இந்த நாட்டின் ஆட்சி யாளர்களின் மனநிலை தான் - என்றார். (அ)

# நல்லூர் சிவன் ஆலயத்தில் இன, மத ஐக்கியத்திற்கான பூசை வழிபாடுகள்!

*யாழ்ப்பாணம், நவ. 13*

இன மத ஐக்கியத்திற்கான பூஜை வழிபாடு நேற்று ஞாயிற்றுக்கிழமை தீபாவளி தினத்தன்று நல்லூர் சிவன் ஆலயத்தில் சிறப்பாக இடம் பெற்றது.


தேசிய இன நல்லிணக்கத்துக்கான அதிகார சபையின் தலைவர் கந்தையா கருணாகரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இன மத ஐக்கியதுக்கான பொங்கல் இடம்பெற்றதுடன் விசேட யாகம் வளர்க்கப்பட்டது.



இந்நிகழ்வில் யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர் ஜெயசீலன், தொழி லதிபர் இ.எஸ்.பி. நாகரத்தினம், யாழ்ப் பாண பல்கலைக்கழக பேராசிரியர் வேல் நம்பி, யாழ்ப்பாண பிரதான பொலிஸ் பரிசோதகர் மற்றும் பிரதேச பொலிஸ் நிலையங்களின் பொறுப்பு அதிகாரிகள் இராணுவ உயர் அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் நாயன்மார்க்கட்டு எஸ் ஓ.எஸ்.கிராம பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. அத்து டன் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங் களும் வழங்கி வைக்கப்பட்டன.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
கணவன்-மனைவிக்குள் ஆரோக்கியமான விவாதம் வந்து போகும். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள் ஆதரிப்பார்கள். நிம்மதி உண்டாகும் நாள்.

**இடபம்**
எதிர்பாராத தனவரவு உண்டு. பிள்ளைகளால் பெருமை அடைவீர்கள். வியாபாரத்தில் சரக்குகள் விற்றுத் தீரும். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். அமோகமான நாள்.

**மிதுனம்**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். உங்களைச் சுற்றி நல்லவர்கள் யார், உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் சில முக்கிய ஆலோசனைகள் தருவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**கடகம்**
பால்ய நண்பர்கள் தேடி வருவார்கள். புதிய வாகனங்கள் வாங்குவீர்கள். உத்தியோகத்தில் விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள். பழைய நினைவுகளில் மூழ்கும் நாள்.

**சிம்மம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். பேச்சில் கம்பீரம் பிறக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்கள்வேலைகளைப் பகிர்ந்து கொள்வார்கள். முயற்சியால் முன்னேறும் நாள்.

**கன்னி**
இங்கிதமான பேச்சால் எல்லோரையும் கவருவீர்கள். வாகனங்களை சரி செய்வீர்கள். பயணங்கள் சிறப்பாக அமையும். வியாபாரத்தில் லாபம் கிடைக்கும். புது வாய்ப்புகள் வரும். உற்சாகமான நாள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். விமர்சனங்களை ஏற்று கொள்வது நல்லது.

**விருட்சிகம்**
எதையும் திட்டமிட்டு செய்ய பாருங்கள். வாகனம் அடிக்கடி செலவு வைக்கும். வியாபாபரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். பொறுப்புகள் கூடும். நிதானம் தேவைப்பட வேண்டிய நாள்.

**தனுசு**
குடும்பத்தினருடன் மனம்விட்டு பேசுவீர்கள். வேற் றுமதத்தவர்உதவுவார். உங்களால் வளர்ச்சிய டைந்த சிலரை சந்திக்க நேரிடும். வியாபாரத்தை பெருக்குவீர்கள். இனிமையான நாள்.

**மகரம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சிந்தனை திறன் பெருகும் நாள்.

**கும்பம்**
உணர்ச்சிப் பூர்வமாக பேசுவதை விட்டு அறிவுப் பூர்வமாகப் பேசுவீர்கள் செயல்படுவீர்கள். புது ஏஜென்சி எடுப்பீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம்பெறுவீர்கள். மதிக்கப்படுவீர்கள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உணர்ச்சிவசப்படாமல் இருங்கள் இரண்டாவது முயற்சியில் சில காரியங்கள் முடியும். உத்தியோகத்தில் வேலைச்சுமை குறையும். கடினமாக உழைக்க வேண்டிய நாள்.

# திருச்சியில் டிசெம்பர் 23 இல் விடுதலை சிறுத்தைகள் மாநாடு

## முதல்வர் ஸ்டாலின் பங்கேற்க உள்ளதாக திருமாவளவன் தகவல்

திருச்சி, நவ. 12

**திருச்சியில் டிசெ. 23ஆம் தேதி விடுதலைசிறுத்தைகள் கட்சி சார்பில் 'வெல்லும் ஜனநாயகம்' என்ற தலைப்பில் நடைபெற உள்ள மாநாட்டில்,முதல்வர் ஸ்டாலின் பங்கேற்கிறார் என்று விசிக தலைவர் திருமாவளவன் எம்.பி. தெரிவித்தார்.**

இதுகுறித்து திருச்சி விமான நிலையத்தில் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் திருச்சியில் டிசெ. 23ஆம் தேதி 'வெல்லும் ஜனநாயகம்' என்ற தலைப்பில் மாநாடு நடைபெற உள்ளது. இதில், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தேசிய பொதுச்செயலாளர் டி.ராஜா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தேசிய பொதுச்செயலாளர் சீதாராம் யெச்சூரி, சிபிஐஎம்எல் தேசிய பொதுச்செயலாளர் தீபங்கர் பட்டாச்சாரியா உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்கின்றனர்.

சஅகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த மாநாடு நடத்துவதற்கான இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலையின் நடைபயணத்தில், அவரது கட்சியினர் பங்கேற்பதைக் காட்டிலும், அதிமுக, பாமகதொண்டர்களே அதிக அளவில் பங்கேற்கின்றனர். பாஜக ஆட்சிக்குவந்தவுடன் பெரியார் சிலை அகற்றப்படும் என்று அண்ணாமலை கூறியுள்ளார். ஒருபோதும் பெரியார் சிலையை அகற்ற முடியாது. அண்ணாமலையின் பேச்சு தமிழகத்தில் எடுபடாது-இவ்வாறு திருமாவளவன் கூறினார்.

(அ)

# வங்கக் கடலில் காற்றழுத்த தாழ்வு பகுதி: தமிழகம் முழுக்க தொடர் மழைக்கு வாய்ப்பு

சென்னை, நவ. 12

வங்ககக் கடலில் எதிர்வரும் 14ஆம் திகதி உருவாகும் காற்றழுத்த தாழ்வுப் பகுதி, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வரும் 16ஆம் திகதி வலுப்பெறக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தென்கிழக்கு வங்கக் கடல் பகுதிகளில் வரும் 14ஆம் திகதி புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகும். இது மேற்கு மற்றும் வடமேற்கு திசையில் நகர்ந்து காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று, மத்திய மற்றும் தெற்கு வங்கக் கடலில் 16ஆம் திகதி நிலவக்கூடும். இதன் காரணமாக தமிழகத்தில் வரும் 14ஆம் திகதி முதல் பரவலாக தொடர் மழை பெய்ய வாய்ப்புள்ளது.

(அ)

# தமிழகத்தில் 18 ஆயிரம் பொலிஸார் குவிப்பு

சென்னை, நவ. 12

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு தமிழகம் முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், சென்னையில் பாதுகாப்புப்பணியில் 18 ஆயிரம் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் அசம்பாவித சம்பங்களை தடுக்கும் வகையில் மக்கள் கூடும் இடங்களில் அதிகமான பொலிஸார் பாதுகாப்புப்பணியில் ஈடுபட்டுள்ளதுடன் பல்வேறு இடங்களில் கண்காணிப்பு கமராக்களும் பொருத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# தேர்தலில் கமல்ஹாசனுடன் கூட்டணி: தி.மு.க. அணிக்கு கை கொடுக்குமா?

சென்னை, நவ. 12

மக்கள் நீதி மய்யம் கட்சித்தலைவர் கமல்ஹாசன் 2018ஆம் ஆண்டு கட்சியை தொடங்கிய ஓராண்டிலேயே பாராளுமன்ற தேர்தலை சந்தித்தார். அந்த தேர்தலில் மக்கள் நீதி மய்யம் கட்சிக்கு நான்கு சதவீத வாக்குகள் கிடைத்தன. அதன் பின்னர் 2021ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் இரண்டு சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளை அந்த கட்சி பெற்றது.

கோவை தெற்கு தொகுதியில் போட்டியிட்ட கமல்ஹாசன் குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியை தழுவினார். வருகிற பாராளுமன்ற தேர்தலில் தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் கமல்ஹாசன் இணைந்து போட்டியிட தயாராகி வருகிறார். இதை அடுத்து மக்கள் நீதி மய்யம் கட்சியை பலப்படுத்தும் வகையில் கட்சியினருக்கு பல்வேறு கட்டளைகளை அவர் பிறப்பித்துள்ளார்.

கிராமங்கள் தொடங்கி நகரங்கள் வரையில் மக்கள் நீதி மய்யம் கட்சியினை பலப்படுத்தி மக்கள் மத்தியில் செல்வாக்கு உள்ள கட்சியாக உருவாக்க வேண்டும் என்று அறிவுறுத்தி இருக்கிறார். பாராளுமன்ற தேர்தலில் மக்களின் குரல் ஒலிக்க வேண்டும். அது மக்கள் நீதி மய்யத்தின் குரலாக இருக்க வேண்டும் என்று தனது பிறந்தநாளில் அவர் கட்சியினர் மத்தியில் பேசினார்.

இதன் மூலம் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு எம்.பி. ஆக வேண்டும் என்பதில் கமல்ஹாசன் தீவிரமாக உள்ளார். இப்படி தி.மு.க., காங்கிரஸ் கூட்டணி கமல்ஹாசனுக்கு நிச்சயம் கை கொடுக்கும் என்று அரசியல் நோக்கர்கள் கணித்துள்ளனர். அதே நேரத்தில் கமல்ஹாசன் உடன் கைகோர்ப்பது தி.மு.க. கூட்டணிக்கு வலுசேர்க்குமா என்பதும் எதிர்பார்ப்பு ஏற்படுத்தி உள்ளது.

மக்கள் நீதி மய்யம் கட்சிக்கு கிராமப்புறங்களை விட நகர்ப்புற பகுதிகளில் அதிக வாக்குகள் கிடைத்துள்ளன. இதன் மூலம் பாராளுமன்ற தேர்தலில் நிச்சயம் மக்கள் நீதி மய்யத்தின் வாக்குகள் தி.மு.க. கூட்டணிக்கு பலன் அளிக்கும் என்று அந்த கட்சியினர் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

அடுத்த ஆண்டு நடைபெற உள்ள பாராளுமன்ற தேர்தலில் எப்படியாவது வெற்றி பெற்று டெல்லியில் தனது குரலை ஒலிக்கச் செய்து விட வேண்டும் என்பதில் கமல்ஹாசன் தீவிரமாக காய் நகர்த்தி வருகிறார். தி.மு.க. கூட்டணியில் அவருக்கு மட்டும் ஒரு இடம் ஒதுக்குவதற்கு வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது.

இருப்பினும் இரண்டு இடங்களை கேட்டு பெற்று விட வேண்டும் என்பதில் மக்கள் நீதி மய்யம் கட்சியினர் வேகம் காட்டி வருகிறார்கள். தேர்தல் நேரத்தில் நடைபெறும் கூட்டணி பேச்சுவார்த்தையில் இதனை வலுவாக வலியுறுத்தவும் அவர்கள் முடிவு செய்து இருக்கிறார்கள். தி.மு.க. கூட்டணியில் ஏற்கனவே காங்கிரஸ், ம.தி.மு.க., விடுதலை சிறுத்தைகள், கம்யூனிஸ்ட் கட்சிகள், மனிதநேய மக்கள் கட்சி உள்ளிட்ட பல கட்சிகள் இடம் பெற்றுள்ளன. இந்த கட்சிகளுடன் சேர்ந்து மக்கள் நீதி மய்யத்தின் வாக்குகளும் கிடைக்கும்பட்சத்தில் அது எங்களது கூட்டணிக்கு பலமாகவே இருக்கும் என்றும் தி.மு.க. கூட்டணி கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

(அ)

# நீதித்துறை மீதான உறுப்பினர்களின் கருத்துக்காக கவலை அடைகிறேன்

## சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன

கொழும்பு, நவ. 13

**பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் தமக்கு காணப்படும் சிறப்புரிமைகளைப் பயன்படுத்தி நீதிபதிகள், சட்டத்தரணிகள் சம்பந்தமாக தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் கரிசனைகளை வெளியிட்டு இலங்கை சட்டத்தரணிகள் அனுப்பி வைத்துள்ள எழுத்துமூலமான கோரிக்கைக் கடிதம் தமக்கு இதுவரையில் கிடைக்கவில்லை என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.**



இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் எனக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளதாக கூறப்பட்டாலும் அது தற்போது வரையில் எனக்கு கிடைக்கவில்லை. அது கிடைத்தவுடன் அதில் உள்ள விடயங்கள் பற்றிய கவனம் செலுத்துவேன்.

முன்னதாக, அச்சங்கத்தின் தலைவர் உள்ளிட்ட குழுவினர் என்னை நேரில் வந்து சந்தித்திருந்தனர். அச்சமயத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறப்புரிமைகளைப் பயன்படுத்தி நீதிபதிகள், சட்டத்தரணிகள் சம்பந்தமாக தெரிவிக்கும் கருத்துக்கள் சம்பந்தமாக எனது கவனத்துக்கு கொண்டுவந்தனர்.

விசேடமாக, உறுப்பினர்களுக்கு சிறப்புரிமைகள் காணப்பட்டாலும், அவர் வெளியிடும் கருத்துக்களால் நாட்டின் நீதித்துறை மீதான நம்பிக்கையீனம் சிதைக்கப்படுவதாக கூறியிருந்தார்கள். அந்த விடயத்தனை நான் மிகவும் கவனத்தில் கொண்டுள்ளேன்.

இந்நிலையில் தான் கடந்த அமர்வில் போது உறுப்பினர்களால் சபையில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் தொடர்பில் நான் பகிரங்கமாக கவலையை வெளிப்படுத்தினேன். குறித்த தருணத்தில் நான் சபையை வழிநடத்தியிருக்காதபோதும், பின்னர் விடயத்தை அறிந்து உடனடியாக பிரதிபலித்தேன்- என்றார். (அ)

# மாரவில கடற்கரையில் மோதல்!

கொழும்பு, நவ. 13

மாரவில வடக்கு முதுகட்டுவ கடற்கரையில் மீன் வாங்கச் சென்ற போது ஏற்பட்ட தகராறில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளதாக மாரவில தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திலிருந்து 12 போர் துப்பாக்கி மற்றும் இரண்டு வெற்றுத் தோட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# இன்று கூடும் சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்றுக் குழு

கொழும்பு, நவ. 13

இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்றுக்குழுவானது இன்று திங்கட்கிழமை கூடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும் சபை அமர்வுகளில் தொடர்ச்சியாக நீதிபதிகள், சட்டத்தரணிகள் மற்றும் நிலுவையில் உள்ள வழக்கு விசாரணைகள் தொடர்பில் சிறப்புரிமைகளை பயன்படுத்தி கருத்துக்களை வெளிப்படுத்துவது தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்படவுள்ளது.

மேலும் இந்த விடயம் சம்பந்தமாக நிறைவேற்றுக்குழுவில் தொடர்ச்சியாக கலந்துரையாடப்படவுள்ள தோடு, உறுப்பினர்கள் சிறப்புரிமைகளை பயன்படுத்தும் அதேநேரம், நீதித்துறையின் சுயாதீனத்தினை பாதுகாப்பு தொடர்பிலும் எவ்விமாக விடயங்களை கையாள முடியும் என்பது தொடபிலான ஒரு மூலோபாயத்தைக் கண்டறிவது குறித்தும் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது. (அ)

# பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள்தலைவருக்கு கொலை மிரட்டல் விடுத்தவர் கைது!

கொழும்பு, நவ. 13

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜானக ரத்நாயக்கவுக்கு கொலை மிரட்டல் விடுத்த குற்றச்சாட்டில் 42 வயதான பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான சந்தேகநபரிடமிருந்து 12 கிராம் ஐஸ் போதைப் பொருளும் ஒரு தொகை பணமும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் குறித்த நபர் வெல்லம்பிட்டியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜானக ரத்நாயக்கவுக்கு கொலை மிரட்டல் விடுத்து பணம் பறிக்க முயற்சித்த குற்றச்சாட்டிலேயே இவர் பொலிஸாரினால் கைதானமை குறிப்பிடத்தக்கது. (அ)

# விமான நிலையத்தில் பிஸ்டலுடன் மாலைதீவு பிரஜை ஒருவர் கைது!

கொழும்பு, நவ. 13

துப்பாக்கி ஒன்றை மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் 58 வயதுடைய மாலைதீவு பிரஜை ஒருவர் விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஓய்வறையில் வைத்து நேற்று முன் தினம் சனிக்கிழமை இரவு இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விமானநிலைய அதிகாரிகள் இவருடைய பயணப் பையை சோதனை செய்த போது துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 10 கிலோ கஞ்சாவுடன் ஆணும் பெண்ணும் கைது!

திருமலை, நவ. 13

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் நேற்று முன் தினம் சனிக்கிழமை திருகோணமலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட என்.சி வீதி, திருகடலூர் பகுதியில் திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது 10 கிலோ 610 கிராம் கேரள கஞ்சாவுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த திருகோணமலை பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய பெண் மற்றும் 43 வயதுடைய ஆண் ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளும் கைப்பற்றபட்டு சந்தேக நபர்களுடன் திருகோணமலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளை திருகோணமலை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# மீனவர்களின் பிரச்னைகளுக்கு பேச்சுவார்த்தையே முற்றுப்புள்ளி!

## தமிழக கடற்றொழில் கூட்டமைப்பு சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 13

இலங்கையின் வடபகுதி கடற்றொழிலாளர்களுக்கும், தமிழக கடற்றொழிலாளர்களுக்கும் இடையிலான பிரச்னைகள் நாளுக்கு நாள் கூர்ப்படைந்து தற்போது தீவிரமடையும் நிலை உருவாக்கபட்டு வருகின்றது. இந்த நிலைமைகள் மேலும் மோசமடையாது முற்றுப்புள்ளி வைப்பதற்காக இந்திய, இலங்கை அரசுகள் உடனடியாக இதயசுத்தியான பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க வேண்டும் என்று தமிழக மீனவர் நலவாரிய உறுப்பினரும், அனைத்து விசைப்படகுகள் சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவருமான எஸ்.யேசுராசா தெரிவித்தார்.

வடமாகாணத்தில் தமிழக மீனவர்களின் கைதுகள் தொடருகின்ற அதேநேரம், தமிழக மீனவர்கள் மற்றும் இழுவைமடி படகுகளின் அத்துமீறல்கள் நீளுகின்றமை தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மைய காலத்தில் தமிழகத்தைச் சேர்ந்த 64போ வடமாகாணத்தில் உள்ள சிறையில் தடுத்து வைக்கப்பட்டனர். அவர்களில் 38பேர் மன்னார் நீதிமன்றத்தின் மூலமும், 8பேர் யாழ்ப்பாண நீதிமன்றத்தின் மூலமும் விடுவிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் 22பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். தீபாவளிப்பண்டிகைக்கு முன்னதாக அவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்று எதிர்பார்த்திருந்தபோதும் அவர்கள் விடுவிக்கப்படாமை எமக்கு ஏமாற்றமளிக்கின்றது.

நாம் தொடர்ச்சியாக தொழிற்சங்க போராட்டத்தை முன்னெடுத்திருந்தோம். எனினும், 42பேர் வரையில் விடுவிக்கப்பட்டமையால் அதனை இலங்கை அரசாங்கத்தின் நல்லெண்ண நடவடிக்கையாகக் கருதி நாம் போராட்டத்தினைக் கைவிட்டிருந்தோம். அதேநேரம், எமது போராட்டத்தின் காரணமாக கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக நீடிக்கும் இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு ஆரம்பத்தில் அரச மட்டத்திலும், அதிகாரிகள் மட்டத்திலும் நான்கு சுற்றுப்பேச்சுவார்த்தைகள் நிறைவடைந்தபோதும் அதில் தீர்வுகள் எட்டப்பட்டிருக்கவில்லை.

தற்போதைய நிலையில், ஒரேமொழிபேசுகின்ற, சகோதரர்களாக பழகுகின்ற, கடலில் ஆபத்தென்றால் கைகொடுகின்ற ஓரினத்தைச் சேர்ந்தவர்களுக்குள் மோதல்கள் உருவாகும் நிலைமைகள் ஏற்படுத்தப்படுகின்றன.

ஆரம்பத்தில் தவறுதலாக எல்லை மீறுபவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பின்னர் அவர்களின் படகுகளும் தடுத்து வைக்கப்பட்டன. இப்போது, படகுகளும், நபர்களும் தடுத்துவைக்கப்படும் நிலை மோசமடைகின்றது.

இதனால், அண்ணன், தம்பிகளாக பழகும் இருநாட்டு கடற்றொழிலாளர்களுக்கு இடையில் முரண்பாடுகள் தீவிரமடைகின்றன. இந்த முரண்பாடுகள் வேண்டுமென்றே தோற்றுவிக்கப்படுகின்றன. இரு நாட்டு கடற்றொழிலாளர்களும் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் ஒன்றாகவே இருக்கின்றன.

இருநாட்டு கடற்றொழிலாளர்களும் வாழ்வாதாரத்துக்காவே போராடுகின்றார்கள். அவ்வாறான நிலையில், இரு தரப்பினரையும் மோதவிடுவதற்கான சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்ற அச்சம் எமக்கு உள்ளது.

எனவே, இந்த நிலைமையை மேலும் தீவிரமளிப்பதற்கு இடமளிக்க கூடாது. உடனடியாக, இலங்கையின் மிகப்பெரும் நட்பு நாடாகவும், அயல் நாடாகவும் இருக்கும் இந்தியா நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம்.

இருநாட்டு அரசாங்கங்களும் இதயசுத்தியுடன் பேச்சுக்களை முன்னெடுத்து நியாயமான உடன்பாடுகளின் அடிப்படையில் இப்பிரச்னைக்கு நிரந்தர மான தீர்வினை எட்ட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம்- என்றார். (அ)

# நீதித்துறையின் நம்பகத்தன்மை சீர்குலைவதற்கு இடமளியாதீர்!

## சபாநாயகருக்கு எழுத்துமூலம் மீண்டும் அறிவித்த இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம்

கொழும்பு, நவ. 13

**பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் கருத்துக்களால் நீதித்துறையின் நம்பகத்தன்மை சீர்குலைவதற்கு இடமளிக்காதீர்கள் என்று கோரிக்கை விடுத்து சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு எழுத்து மூலமான கோரிக்கையை மீண்டும் விடுத்துள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கௌசல்ய நவரட்ண தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்றத்தின் கடந்த வார அமர்வின் போது, நாட்டின் அமைச்சரவை அமைச்சுப் பொறுப்பில் உள்ள அமைச்சர் ஒருவர் மேல்நீதிமன்ற நீதிபதி தொடர்பில் பல்வேறு கருத்துக்களை சபையில் தெரிவித்திருந்தார். அந்த விடயங்கள் உண்மையா இல்லையா என்பது சம்பந்தமாக முழுமையாக ஆராயப்பட வேண்டும்.

ஏனென்றால், நீதிபதிகள் மீதும் சட்டத்தரணிகள் மீதும் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் உண்மையாக இருந்தால் அவை பாரதூரமானதாகும். அதேபோன்று அந்தக் குற்றச்சாட்டுக்கள் பொய்யானவையாக இருந்தால் குற்றச்சாட்டு சுமத்தும் நபரின் பொறுப்புக்கூறல் முக்கியமாகின்றது என்பதோடு, நாட்டின் நீதித்துறைக்கு பெரும் களங்கம் ஏற்படுத்தப்படுவதாகவும், தனிநபரின் கௌரவத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் அமைகின்றது.

ஆகவே, தான் நாம், இவ்விதமான நிலைமைகளை ஆராய்வதற்காக சுயாதீன அங்கத்தவர்களைக் கொண்ட குழுவொன்றை ஸ்தாபித்து உண்மைகளை வெளிப்படுத்தி நடவடிக்கைகளை எடுக்குமாறு வலியுறுத்தியுள்ளோம்.

மேலும், நாம், கடந்த காலத்தில் நீதித்துறையின் சுயாதீனத்துக்கும், நம்பகத்தன்மைக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் அமைச்சர்கள் தமக்கு காணப்படுகின்ற சிறப்புரிமைகளை பயன்படுத்தி ஏற்படுத்துகின்ற சேதப்படுத்தல்கள் சம்பந்தமாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவை நேரில் சந்தித்து எடுத்துரைத்திருந்தோம்.

அதன்போது, குறித்த விடயம் சம்பந்தமாக அவர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்குவதாக குறிப்பிட்டிருந்தார். எனினும் அந்த நிலைமை தற்போதும் நீண்டு கொண்டுள்ளது. ஆகவே நாம் மீண்டும், குறித்த விடயத்தினை எழுத்து மூலமாக சபாநாயகருக்கு அனுப்பி வைத்துள்ளோம். அவருடைய பதிலுக்காக காத்திருகின்றோம்- என்றார். (அ)

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு!

கொழும்பு, நவ. 13

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில், நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 70 ஆயிரத்தை கடந்துள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த ஒக்ரோபர் மாதத்தில் மாத்திரம் இரண்டாயிரத்து 300 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

டெங்கு தொற்று உறுதியானர்வகளில் அதிகளவானோர் கொழும்பு மாவட்டத்திலிருந்து இனங்காணப்பட்டுள்ளனர்.

அத்துடன், கம்பஹா, களுத்துறை, கண்டி, காலி, ஹம்பாந்தோட்டை, மாத்தறை, மன்னார் போன்ற பிரதேசங்களில் அதிகளவான நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், இந்த ஆண்டின் ஆரம்பம் முதல், இதுவரையான காலப்பகுதியில், டெங்கு நோய் தொற்றுக்கு உள்ளான, 44 பேர் உயிரிழந்துள்ளதாக அந்த பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் நளின் ஆரியரத்ன தெரிவித்துள்ளார். (அ)

# மின் நிலையங்களின் மின்னுற்பத்தி உயர்வு!

கொழும்பு, நவ. 13

நிலவும் மழையுடனான கால நிலை காரணமாக நாட்டில் உள்ள மின்னுற்பத்தி நிலையங்களின் மின்னுற்பத்தி 58 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

இலங்கை மின்சார சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், நீர் மின்னுற்பத்தி நிலையங்களைச் சார்ந்த நீர்த்தேக்கங்களின் கொள்ளளவு 84 சதவீதத்தை கடந்துள்ளதாக இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் பொறியிலாளர் நோயல் பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, தேசிய மின் கட்டமைப்பில் அனல் மின் நிலையங்களின் பங்களிப்பு குறைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# யாழ்ப்பாணத்தில் குற்றங்களில் ஈடுபட்டுவிட்டு இந்தியாவுக்கு தப்பிச் சென்ற நபர் சிக்கினார்!

சென்னை, நவ. 13

இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக இந்தியாவிற்கு படகு மூலம் சென்ற ஒருவர் தமிழக கரையோர காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கையில் குற்றவழக்குகளில் தொடர்புடைய நபர் ஒருவர் ஏதிலியாக தமிழகத்துக்கு செல்ல முயற்சித்த போது நேற்று முன் தினம் கைதானார்.

கைதானவர் யாழ்ப்பாணம் தினம், ஊர்காவற்துறையை சேர்ந்தவர் என தமிழக தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த நபர் சாவகச்சேரி மற்றும் ஊர்காவற்றுறை ஆகிய பகுதிகளில் கொள்ளை சம்பவங்களுடன் தொடர்புடையவர் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தநிலையில், சந்தேகநபர் தொடர்பான சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக தமிழக ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (அ)

# சோள பயிர்ச் செய்கை உரங்கள் இலவசமாக வழங்க நடவடிக்கை

கொழும்பு, நவ. 13

40 ஆயிரம் ஏக்கர் அளவிலான சோள பயிர்ச் செய்கைக்குரிய உரங்களை இலவசமாக வழங்கவுள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

யூரியாவுக்கு மேலதிகமாக டி.எஸ்.பி மற்றும் எம்.ஓ.பி ஆகிய உரங்களும் இலவசமாக வழங்கப்படவுள்ளது.



அத்துடன், சோளப் பயிர்ச் செய்கைக்கு தேவையான நிலத்தை பண்படுத்தும் பணிகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விவசாயம் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் கீழ் இயங்கும் சிறிய அளவிலான விவசாய தொழில்முனைவோர் திட்டத்தின் ஊடாக இந்த போகத்தில் ஐந்து மாவட்டங்களில் 40 ஆயிரம் ஏக்கர் சோளம் பயிரிடப்படுவதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (அ)

# 14 வயது சிறுமியை கடத்திச் சென்று மறைத்து வைத்த இளைஞன் கைது!

கொழும்பு, நவ. 13

உடபுஸ்லலாவ ஒல்டிமார் பகுதியைச் சேர்ந்த 14 வயது சிறுமியை கடத்திச் சென்று வவுனியா, இலுப்பைக்குளம் பகுதியில் உள்ள வீடொன்றில் மறைத்து வைத்திருந்த 18 வயது இளைஞன் நேற்று முன் தினம் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இந்த நிலையில் குறித்த சிறுமி மருத்துவ பரிசோதனைகளுக்காக வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட குறித்த இளைஞனை வவுனியா நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது டன், சிறுமியின் மருத்துவ அறிக்கைகளை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# தெமட்டகொடவில் குண்டுத் தாக்குதல்!

கொழும்பு, நவ. 13

போதைப்பொருள் கடத்தல் காரரும், திட்டமிட்ட குற்றவாளியுமான தெமட்டகொட ருவானின் வீட்டின் மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெமட்டகொட பொலிஸார் தெரிவித்தனர்.

தெமட்டகொட, வெலுவன பிரதேசத்தில் உள்ள வீட்டின் மீது இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீட்டின் முன் வாயிலில் இரண்டு வெடிகுண்டுகளும் தோட்டத்தில் ஒரு வெடிகுண்டும் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட தெமட்டகொட ருவன் தற்போது புஸ்ஸ உயர் பாதுகாப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (அ)

# அரிசி மாபியாக்களின் செயற்பாடுகளே கீரி சம்பா தட்டுப்பாட்டுக்குக் காரணம்!

கொழும்பு, நவ. 13

அரிசி மாபியாக்களின் செயற்பாடுகளே சந்தையில் கீரி சம்பாவின் தட்டுப்பாட்டுக்கான காரணம் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

தேவையான அளவு கீரி சம்பா தொகை கையிருப்பில் உள்ள போதிலும் அரிசி ஆலை உரிமையாளர்கள் அதனை சந்தைக்கு வழங்குவதற்கு தயக்கம் காட்டுவதாக அந்த திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சிறுபோகத்தில் கீரி சம்பா அறுவடை குறைவடைந்திருந்தாலும், அதற்கு முன்னதாக பெரும்போகத்தில் செய்யப்பட்ட அறுவடையில், கீரி சம்பா கையிருப்பு தற்போதைய காலத்திற்கும் போதுமானதாக காணப்பட்டதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# 175,000 மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் ஏல விற்பனை

கொழும்பு, நவ. 13

175,000 மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் எதிர்வரும் 15ஆம் திகதி ஏல விற்பனையின் ஊடாக வழங்கப்படவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதன்படி, 91 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 75 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 182 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 65 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 364 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 35 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏல விற்பனையின் ஊடாக வழங்கப்படவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

# வரலாற்றில் மிகவும் சவாலான பட்ஜெட்!

## பொருளாதார நிபுணர்கள் கருத்து

கொழும்பு, நவ. 13

**வழமையான வரவு-செலவுத் திட்டத்திற்கு மாறாக ஆக்கபூர்வமான கொள்கைகளை முன்வைத்தால் மாத்திரமே மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் என பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.**

வரலாற்றில் மிகவும் சவாலான வரவு - செலவுத் திட்டமாக இந்த வரவு - செலவுத் திட்டம் அமையும் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதி அமைச்சர் என்றவகையில் இன்று பாராளுமன்றத்தில் 2024 ஆம் ஆண்டுக்கான அரசாங்க செலவினங்கள் உட்பட வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பை சமர்ப்பிக்க உள்ளார்.

2024 ஆம் ஆண்டுக்கான அரசாங்க ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின்படி, அரசாங்கத்தின் மதிப்பிடப்பட்ட செலவு 3,860 பில்லியன் ரூபாவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், 2023ஆம் ஆண்டு அரசாங்க ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின்படி செலவினம் 3,657 பில்லியன் ரூபாவாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டிற்கான உத்தேச செலவு 203 பில்லியன் ரூபாவால் அதிகரித்துள்ளது.

(அ)

# திருகோணமலையில் நில அதிர்வு

திருமலை, நவ. 13

திருகோணமலை - மொரவெவ பிரதேசத்தில் சிறிய அளவிலான நில அதிர்வு பதிவாகியுள்ளது.

3.4 மக்னிடியுட் அளவில் இந்த நில அதிர்வு பதிவாகியுள்ளதாக புவிசரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

நேற்று பிற்பகல் 1.15 மணிக்கு இந்த நில அதிர்வு பதிவாகியுள்ளது.

கந்தளாய், மொரவெவ, திருகோணமலை உள்ளிட்ட பிரதேசங்களில் நில அதிர்வு உணரப்பட்டதாக புவிசரிதவியல், சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

# நீரில் மூழ்கி இளைஞன் மாயம்!

கொழும்பு, நவ. 13

ரம்புக்கனை, போலகம பாலத்திற்கு அருகில், மா ஓயாவில் நீராடச் சென்ற 29 வயதுடைய நபரே நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நண்பர்கள் குழுவுடன் பிறந்தநாள் விழாவை நடத்துவதற்காக குறித்த இடத்திற்குச் சென்றபோது இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளமை பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

காணாமல் போன இளைஞரை தேடும் பணியை பொலிஸ் கடற்படை பிரிவினரும் கடற்படையினரும் ஆரம்பித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# 7 போத்தல் மது அருந்தியவர் பலி 2 பெண்கள் வைத்தியசாலையில்!

கொழும்பு, நவ. 13

கொழும்பு - கோட்டையில் உள்ள நான்கு மாடிக் கட்டடத்தில் நடைபெற்ற பிறந்தநாள் விழாவில் மது அருந்திக்கொண்டிருந்த 38 வயதுடைய நபரொருவர் உயிரிழந்துள்ளதுடன், இரண்டு பெண்கள் உட்பட மூவர் திடீரென சுகவீனமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வெலிக்கடை பொலிஸார் தெரிவித்தனர்.

ரன்ன வாடிகல பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய நபரே இதில் உயிரிழந்துள்ளார்.

பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கு வந்தவர்கள் குறித்த சரியான தகவல்கள் இல்லை என்றும், அவர்கள் அதிக விலை கொடுத்து 7 போத்தல் மது வாங்கி அருந்தியது தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் நடந்த இடத்திற்கு கொழும்பு மருத்துவ பீடத்தின் பேராசிரியர் அசேல மெண்டிஸ் வந்து தடயவியல் பரிசோதனை நடத்தினார்.

(அ)

# ஜனாதிபதி அலுவலக பரிந்துரையின் பின்னர் வாகன இறக்குமதி குறித்து தீர்மானிக்கப்படும்

கொழும்பு, நவ. 13

ஜனாதிபதி செயலகத்தினால் நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளை பெற்றுக்கொண்டதன் பின்னர் வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பில் தீர்மானிக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு பேட்டியளித்த அவர், நாட்டின் வாகன சந்தையை பாதிக்கும் என்பதால்,



வாகன இறக்குமதியை அனுமதிக்கும் குறிப்பிட்ட திகதியை அறிவிக்க முடியாது .

நான் திகதியை அறிவித்தால் உள்ளூர் வாகன விற்பனையில் பாரிய மாற்றம் ஏற்படும் -என்றார்.

(அ)

# சர்வதேச உறவுகள் கொண்ட தலைவரினால் ஒரு டொலர்கூட கொண்டுவர முடியவில்லை

கொழும்பு, நவ. 13

சர்வதேச உறவுகளை கொண்டவர் என நியமிக்கப்பட்ட தலைவரால் இன்னும் ஒரு டொலரை கூட மேலதிகமாக நாட்டுக்கு கொண்டு வர முடியவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

"நல்ல மூளைசாலி, சிறந்த சர்வதேச தொடர்புள்ளவர் என நியமித்த நாட்டின் தலைவரால் சர்வதேசத்திலிருந்து ஒரு டொலரைக் கூட மேலதிகமாக நாட்டுக்கு கொண்டு வர முடியவில்லை.

சகல பொருட்களும் கடனாகவே பெறப்பட்டதுடன், மனிதாபிமான உதவிகளாகவே கிடைத்தன.

அஸ்வெசும திட்டத்தைக் கூட முட்டாள்தனமான முறையில் செயல்படுத்தினார்கள். குடும்ப அலகின் வருமான செலவினம் அடங்களான சனத்தொகை கணக்கெடுப்பே முதலில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றாலும் அது அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லை.

இதன் காரணமாக உலக வங்கியில் இருந்து பெறப்பட்ட பணம் எந்த அறிவியல் பின்புலமும் இல்லாமல் பகிர்ந்தளிக்கப்பட்டது, இதன் பின்னரே



தற்போது சனத்தொகை கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது.

இந்நாடு நல்ல பாதையில் செல்ல முடியும் என்றாலும், எடுக்கும் ஒவ்வொரு எட்டும் ஆதாரம் மற்றும் தரவுகளின் அடிப்படையில் அறிவியல் பூர்வமாக செய்யப்பட வேண்டும்.

இவ்வாறின்றி நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியாது. மாற்று அணி என்று கூறிக்கொள்ளும் அரசியல்வாதிகள் உலகம் பூராகவும் திரிந்து, ஐக்கிய மக்கள் சக்தி செயல்படுத்தும் நேர்மறையான திட்டங்களுக்கு சேறு பூசும் நடவடிக்கையை மட்டும்தான் செய்து வருகின்றனர்.

ஐக்கிய மக்கள் சக்தி தற்போது நாட்டிற்கு தேவையான டொலர்களை கொண்டு வரும் நிலையான வேலைத்திட்டத்தையே நடைமுறைப்படுத்தி வருகிறது.

ஸ்மார்ட் வகுப்பறை என்பது மனித மூலதனத்தை கட்டியெழுப்புவதற்கான முதலீடு. நாட்டின் 41 இலட்சம் மாணவர் தலைமுறை அறிவாற்றலுடன் சித்தப்படுத்தி, நல்ல திறன்கள் மற்றும் ஆளுமைகள் கொண்ட மனித வளக் குழு இதனால் உருவாக்கப்படும். உலகத் தரத்திலான திறன்களை வழங்குவதன் மூலம், தேசிய மற்றும் சர்வதேச தொழிலாளர் சந்தையில் அவர்களின் தகுதிக்கு ஏற்ப வேலைக்குச் செல்ல முடியும்.

சில அரசியல்வாதிகளுக்கு ஸ்மார்ட் நாடு என்பது வெறும் வார்த்தையாகவே மட்டும் உள்ளதாகவும்,ஸ்மார்ட் நாடு என்றால் ஸ்மார்ட் கல்வி, ஸ்மார்ட் மாணவர்கள், ஸ்மார்ட் இளைஞர்கள் மற்றும் ஸ்மார்ட் குடிமக்கள் இருக்க வேண்டும், இதனால் குறுகிய மனப்பான்மை இல்லாத குடிமகனே உருவாகுவான்.

நாட்டின் உச்ச சட்டத்தில் அரசியல் மற்றும் சிவில் உரிமைகளே மனித உரிமைகளாக கொண்டிருந்தாலும், ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் மனித உரிமைகளின் கீழ் கல்வி உரிமை, வாழ்வாதார உரிமை மற்றும் காணி உரிமையை உள்ளடக்குகின்றன" என தெரிவித்தார்.

(அ)

# இலங்கை கிரிக்கெட்டிற்கு தடை; தீர்வு காண நாமல் எம்.பி அழைப்பு

கொழும்பு, நவ. 13

கிரிக்கெட் நிர்வாகம் மற்றும் அரசியல்வாதிகளின் பிரச்னைகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்பட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவ்வாறு இல்லாத பட்சத்தில் வீரர்கள் அசௌகரியங்களுக்கும் பாரபட்சங்களுக்கும் ஆளாக நேரிடும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

தான் விளையாட்டுத்துறை அமைச்சராக இருந்த போது நிர்வாக பிரச்னைகளை கலந்துரையாடல் மூலம் தீர்த்துவைத்ததாகவும், விளையாட்டு மற்றும் வீரர்களின் எதிர்காலம் குறித்து சிந்தித்து செயற்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அரசியலுக்கும் கிரிக்கெட் நிர்வாகத்திற்கும் இடையிலான முரண்பாட்டின் காரணமாக சர்வதேச கிரிக்கெட் சபையினால் இலங்கை கிரிக்கெட்



தடைசெய்யப்பட்டுள்ளது.

விளையாட்டுத் தடை காரணமாக வருடாந்தம் நேரடியாகவும் மறைமுகமாகவும் சுமார் 100 மில்லியன் டொலர்கள் நஷ்டம் ஏற்படுவதாக நாமல் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்தின் செயற்பாடுகளில் அரசியல் தலையீடுகள் இல்லை என்பதனை இலங்கை கிரிக்கெட் சபை நிரூபிக்கும் வேண்டும் என சர்வதேசக் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இலங்கை கிரிக்கெட்டுக்குள் அரசியல் புகுந்துள்ளது எனத் தெரிவித்துள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இலங்கைக் கிரிக்கெட்டை உறுப்புரிமையிலிருந்து இடைநிறுத்தியது.

இலங்கைக் கிரிக்கெட் சபை சில வருடங்களாக பெரும் அரசியல் தலையீடுகளுக்கு மத்தியில் செயற்பட்டு வருகின்றது என பல தரப்பினராலும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# பொத்துவில் கனகர் கிராம மக்கள் 73 பேருக்கு காணி அனுமதி பத்திரம்

## கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் வழங்கினார்

அம்பாறை, நவ. 13

33 வருடங்களாக மறுக்கப்பட்டு வந்த பொத்துவில் கனகர் கிராம மக்களில் முதற்கட்டமாக 73 பேருக்கு காணி அனுமதிப்பத்திரம் வழங்கிவைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் குறித்த காணி அனுமதிப்பத்திரங்களை நேற்று முன்தினம் திருகோணமலை காணி ஆணையாளர் பணிமனையில் வைத்து வழங்கி வைத்தார்.

ஆளுநர் செந்தில் தொண்டமான் கடந்த யூலை மாதம் 11ஆம் திகதி அம்பாறை மாவட்டத்திற்கு விஜயம் செய்த வேளை சர்ச்சைக்குரிய கனகர் கிராமத்திற்கும் விஜயம் செய்தார். அப்போது உறுதியளித்தபடி குறித்த காணி அனுமதிப்பத்திரங்களை அவர் நேற்று முன்தினம் வழங்கி வைத்தார்.

அவ் வைபவத்தில் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான தவராசா கலையரசன், எஸ்எம். முஷாரப், கபில அத்துக்கோரள பொத்துவில் பிரதேச செயலாளர் பிர்னாஸ் மற்றும் உள்ளிட்ட பிரமுகர்கள் சமுகமளித்திருந்தனர்.

பொத்துவில் கனகர் கிராம மக்களின் கடந்த 33 வருட கால போராட்டத்திற்கு முதல் கட்ட நிவாரணமாக இந்த காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியான போராட்டத்தில் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், முன்னாள் காரைதீவு தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், பொத்துவில் பிரதேச முன்னாள் உப தவிசாளர் பெருமாள் பார்த்திபன் உள்ளிட்ட பல தமிழ் தேசிய பிரமுகர்கள் பிரதான பங்கினை வகித்திருந்தார்கள்.



போராட்டத் தலைவி ரங்கத்தனா தலைமையிலான மக்கள் குழுவினர் அந்த இடத்திலே முகாம் அமைத்து வருட கணக்கில் போராடி வந்தார்கள்.

இது தொடர்பில் போராட்டத்தில் பங்கெடுத்த காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் கூறுகையில்-

இங்கு வாழ்ந்து வந்த மக்கள் 1985 இற்கு பின்னர் யுத்தத்தில் இடம்பெயர்ந்தனர். அங்கு

வாழ்ந்த 226 பேரில் முதல் கட்டமாக 73 பேருக்கு காணியை விடுவிக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. ஒருவருக்கு 1 ஏக்கர் 20 பேர்ச்சஸ் காணி வழங்கப்படும். பயிர்ச்செய்கைக்காக 1 ஏக்கர் காணியும் வீடு அமைக்க 20 பேர்ச்சஸ் காணியும் வழங்கப்படவிருக்கிறது.

எம்மைப் பொறுத்தவரை அனைவருக்கும் இக் காணிகள் பகிரந்தளிக்கப்பட வேண்டும்-என்றார்.

(அ)

# தொற்றுக்கழிவுகள் மற்றும் திண்மக்கழிவுகளை முகாமைத்துவம் செய்வதற்கான பயிற்சி நெறி



அம்பாறை, நவ. 13

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் அவர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வரும் தொற்றுக்கழிவு மற்றும் தின்மக்கழிவுளை முகாமைத்துவம் செய்யும் செயற்றிட்டத்தின் கீழ் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கான கள விஜயமும், பயிற்சிநெறியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கடந்த 10 ஆம் திகதி சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சி நெறியில் பொதுச் சுகாதார மற்றும் தர முகாமைத்துவப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஏ. எம்.ஹில்மி, வளவாளராக கலந்து கொண்டு இந்நிகழ்வில் விரிவுரையாற்றினார்.

(அ)



# கல்முனை முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தின் ஆசிரியர் தின விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

அம்பாறை, நவ. 13

சர்வதேச ஆசிரியர்தினத்தை முன்னிட்டு கல்முனை முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தினால் சர்வதேச ஆசிரியர்தின விழா மற்றும் பரிசளிப்பு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இவ்விழா சமாதான பாலர் பாடசாலையின் பணிப்பாளர் எம்.எச்.ஹிஜ்ரா, ஹூஸைனியா கிட்ஸ் மொண்டசோறியின் பணிப்பாளர் ஏ.எல்.நஸ்றீன் மற்றும் அல்-மிஸ்பாஹ் பாலர் பாடசாலையின் பணிப்பாளர் எம்.எச்.எஸ்.சஹ்றா ஆகியோரின் தலைமையில், கல்முனை அல்-பஹ்றியா மகா வித்தியாலயக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வரும், கல்முனை ரஹ்மத் பவுண்டேசன் ஸ்தாபகருமான ரஹ்மத் மன்சூர், கௌரவ அதிதியாக ஏ.சீ.ஏ அன்ட் சன்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் ஏ.சீ.அலி சப்றி, விஷேட அதிதிகளாக கல்முனை வலயக் கல்வி அலுவலக கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் பீ.ஜிஹானா ஆலிஃப், கல்முனை வலய பாலர் பாடசாலை கல்விப் பணியக வெளிக்கள உத்தியோகத்தர் அஷ்-ஷேய்க் ஐ.எல். முஹம்மது அனீஸ், அல்-பஹ்றியா மகா வித்தியாலய அதிபர் எம்.எஸ்.எம். பைசல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் ஆசிரியர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றிருந்தோடு இந்நிகழ்வில் பங்குபற்றிய ஆசிரியர்களுக்கு நினைவுச் சின்னங்களும், பரிசில்களும் அதிதிகளினால் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

(அ)

# உலக உணவுத் திட்டத்தின் கீழ் உலர் உணவு பொதிகள் வழங்கல்

அம்பாறை, நவ. 13

உலக உணவுத் திட்டம் அரசாங்கத்துடன் இணைந்து பல்வேறுவகையான வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அதன் ஓர் அங்கமாக அம்பாறை மாவட்டத்திலுள்ள வறிய, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் உணவுத் தேவையை பூர்த்தி செய்யும் நோக்கில் உலர் உணவுகளை வழங்கும் வேலைத் திட்டத்திற்கு உதவிக் கரம் நீட்டிவருகின்றது.

அந்தவகையில், இறக்காமம் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட 12 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய 2,679 பயனாளிக் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர். அவர்களுக்கான, உலக உணவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கும் முதற்கட்ட நிகழ்வு இறக்காமம் பிரதேச செயலக திட்டமிடல் பிரவின் நெறிப்படுத்தலின் கீழ் இறக்காமம் பிரதேச செயலாளர் அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம். றஸ்ஸான் (நளீமி) தலைமையில் பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்விற்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம கலந்து கொண்டு பயனாளிகளுக்கு உலர் உணவு பொதிகளை வழங்கி வைத்தார். இதன் போது தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் ஒரு குடும்பத்திற்கு இரண்டு மாதங்களுக்குத்



தேவையான 15,000 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

மேலும் இந் நிகழ்வில் விஷேட அதிதிகளாக அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ஏ.அனீஸ், உலக உணவுத் திட்டத்தின் இணைப்பாளர் எஸ்.பத்மன் மற்றும் உலக உணவுத்திட்ட நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் ஏ.வின்சன் ஆகியோர்களும் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்தனர்.

மேலும் இறக்காமம் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் நஸீல், கணக்காளர் திருமதி. பாத்திமா றிம்ஷியா அர்ஷாட், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் கே.எல். ஹம்சார், நிருவாக உத்தியோகத்தர் எம்.எம்.எம். தௌபீக், நிருவாக கிராம உத்தியோகத்தர் எச்.பி.என்.யசரத்ன பண்டார, சமுர்த்தி தலைமை பீட முகாமையாளர் ஏ.எல். நௌபீர், மற்றும் இத்திட்டத்தின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் அபிவிருத்தி உத்தியோகத்தர் பி.எம். பெறோஸ் (நளீமி) மற்றும் இறக்காமம் பொலிஸ் நிலைய குற்றவியல் பிரிவின் பொறுப்பதிகாரி ஜௌபர் உட்பட கிராம சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கிவைத்தனர்.

மேலும் அம்பாறை மாவட்ட செயலாளர் இறக்காமப் பிரதேச செயலகத்தின் அனைத்து பிரிவுகளுக்கும் பிரத்தியேகமாக விஜயம் செய்து அங்குள்ள குறைநிறைகளை பிரதேச செயலாளரிடம் கேட்டறிந்து அதற்கான தீர்வுகளையும் செய்து தருவதாக உறுதியாளித்தார். (அ)

# அவுஸ்திரேலியாவில் தொடர்ந்தும் பலஸ்தீன சார்பு ஆர்ப்பாட்டங்கள்!

## ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்பு

சிட்னி, நவ. 13

**அவுஸ்திரேலியாவின் பல நகரங்களில் இடம்பெற்ற பலஸ்தீனியர்கள் சார்பு ஆர்ப்பாட்டங்களில் மீண்டும் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டுள்ளனர்.**

**பலஸ்தீன சார்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் உடனடி யுத்த நிறுத்தத்தை கோரியுள்ளனர்.**

**இதேவேளை சிட்னியில் பணயக்கைதிகள் விடுதலையை வலியுறுத்தி இஸ்ரேல ஆதரவு ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்றுள்ளன.**



ஒக்ரோபர் ஏழாம் திகதி ஹமாஸ் தாக்குதலை தொடர்ந்து இஸ்ரேல் தாக்குதலை ஆரம்பித்த பின்னர் தொடர்ச்சியாக ஐந்தாவது வாரமாக அவுஸ்திரேலியாவில் வார இறுதி ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுகின்றன.

நேற்று ஞாயிற்றுக்கிழமை சிட்னி மெல்பேர்னில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானவர்கள் கலந்துகொண்டுள்ளனர்.

பிரிஸ்பேர்னிலும் பேரணி இடம்பெற்றுள்ளது.

காசாவை ஆயிரக்கணக்கான குழந்தைகளின் மரணபூமி என வைத்தியர்கள் வர்ணித்துள்ளனர் என ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட யுத்தத்தை தடுப்பதற்கான மருத்துவ சங்கத்தின் துணை தலைவர் மார்கிரட் பீவிஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த சில நாட்களிற்கு முன்னர் தீக்கிரையான உணவகத்தின் உரிமையாளர் தனது உணவகம் தீக்கிரையாக்கப்படலாம் என தனது பணியாளர்களிற்கு முன்கூட்டியே தகவல் கிடைத்தது என தெரிவித்துள்ளார்.

மெல்பேர்ன் பேரணியில் விக்டோரியாவின் கிறீன்ஸ் கட்சியின் தலைவர் சமந்தா இரட்ணம் உட்பட பலர் கலந்துகொண்டுள்ளனர்.

மெல்பேர்னின் ஸ்வான்ஸ்டொன் வீதியை நோக்கி பேரணியாக சென்றவர்கள் யுத்தநிறுத்தம் சுதந்திர பலஸ்தீனம் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து கோசங்களை எழுப்பியுள்ளனர். (அ)



# எங்கள் மரணம் நிகழ்வதற்கு சில நிமிடங்களே உள்ளன!

## இஸ்ரேலிய படையினர் சுற்றிவளைத்துள்ள மருத்துவமனையின் இயக்குநர் கதறல்

ஜெருசலேம், நவ. 13

காசாவின் அல்ஸிபா மருத்துவமனையின் இயக்குநர் மரணம் நிகழ்வதற்கு சில நிமிடங்களே உள்ளன என்ற நிலையில் நாங்கள் இருக்கின்றோம் என தெரிவித்துள்ளார்.

காசாவில் இஸ்ரேலிய படையினரின் முற்றுகைக்குள்ளாகியுள்ள மருத்துவமனையிலிருந்து கருத்து தெரிவித்துள்ள முகமட் அல்ஸல்மியா நாங்கள் உயிர்களை இழக்க ஆரம்பித்துள்ளோம் காயம்பட்டவர்களும் பாதிக்கப்பட்டவர்களும் உயிர் இழக்கின்றனர் இன்குபேட்டரில் உள்ள குழந்தைகள் கூட உயிரிழக்கின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

மருத்துவமனை வளாகம் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது மருத்துவமனையின் கட்டடங்கள் இலக்குவைக்கப்படுகின்றன மருத்துவமனைக்குள் நடமாடும் எவரும் இலக்குவைக்கப்படுகின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளியே உள்ள இஸ்ரேலிய படையினர் எவரையும் உள்ளே அனுமதிக்கின்றார்கள் இல்லை, இன்குபேட்டரில் இருந்த குழந்தையொன்று உயிரிழந்துள்ளது தீவிர சிகிச்சை பிரிவில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாங்கள் முற்றாக உலகில் இருந்து துண்டிக்கப்பட்டுள்ளோம் எந்தவேளையிலும் மரணம் நிகழ்வதற்கு சில நிமிடங்களே உள்ள எனவும் தெரிவித்துள்ள அவர் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதுமருத்துவிநியோகம் இணையவசதிகளும் துண்டிக்கப்பட்டுள்ளன. (அ)

# இஸ்ரேலிய கப்பலின் வருகைக்கு எதிராக சிட்னியில் கடலில் இறங்கி ஆர்ப்பாட்டம்!



சிட்னி, நவ. 13

அவுஸ்திரேலியாவின் சிட்னியின் பொட்டனி துறைமுகத்தில் திரண்ட ஆயிரக்கணக்கான பாலஸ்தீன ஆர்ப்பாட்டக்காரர்கள் இஸ்ரேலின் சரக்கு கப்பலின் வருகையை தடுத்துள்ளனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களில் ஒருபகுதியினர் கரையில் நின்று கொடிகளை ஏந்தி கோசங்களை எழுப்பியஅதேவேளை ஏனையவர்கள் கடலிற்குள் இறங்கி இஸ்ரேலிய கப்பல் வரவுள்ள பகுதியை நோக்கி சென்றனர்.

சிட்னியின் பலஸ்தீனத்திற்கான நீதி இயக்கமும் பலஸ்தீனத்திற்கான தொழிற்சங்கங்களும் இணைந்து இந்த ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்திருந்தன.

இது இஸ்ரேலிய கப்பல்களின் வருகைக்கு எதிரான போராட்டத்தின் ஆரம்பம் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட கப்பல் நிறுவனம் இஸ்ரேலிற்கு ஆயுதங்களை கொண்டு செல்கின்றது என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பொட்டனி துறைமுகத்திற்கு கப்பல் வரும் ஒவ்வொரு தடவையும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோம் என ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்த ஒருவர் தெரிவித்துள்ளார்.

உலகில் ஒவ்வொரு நாட்டிலும் துறைமுகங்கள் உள்ளன இதன் அர்த்தம் என்னவென்றால் அவர்களுக்கு எதிராக ஒவ்வொரு துறைமுகத்திலும் நாங்கள் போராடலாம் அவர்களை மண்டியிடச்செய்யலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலை பொருளாதார ரீதியாக தாக்க தொடங்குங்கள் அது அவர்களை காயப்படுத்தும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்ற வேளை கப்பல் அந்த பகுதியில் இல்லை எனவும் அதன் வருகை தாமதமாகியுள்ளது எனவும் தெரியவந்துள்ளது.

# காஸாவின் தென்பகுதியில் வீதிகளில் சடலங்களும் இஸ்ரேலிய டாங்கிகளும்

## தப்பியோடும் மக்கள் தெரிவிப்பு

ஜெருசலேம், நவ. 13

காசாவின் வடபகுதியில் இடம்பெறும் கடும் மோதல்களில் இருந்து தப்பியோடும் மக்கள் வீதிகளில் இஸ்ரேலிய டாங்கிகளையும் அழுகிய நிலையில் சடலங்களையும் காண்பதாக தெரிவித்துள்ளனர்.

பொதுமக்களை குறிப்பிட்ட நேரங்களில் சலால் அல் டின் வீதியை பயன்படுத்துமாறு இஸ்ரேல் கேட்டுக்கொண்டுள்ளது. சமூக ஊடகங்களில் இந்த விபரங்கள் வெளியா கியுள்ளன.

இஸ்ரேல் துண்டுபிரசுங்கள் மூலமும் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது. தப்பியோடும் மக்களின் பயணம் எவ்வாறான தாக காணப்படுகின்றது.

அவர்களின் பயணிக்கும் பகுதிகளில் இருந்து வெளியான வீடியோக்களை பிபிசி ஆராய்ந்துள்ளது.நேரில் பார்த்தவர்களின் சாட்சியங்களை செவிமடுத்துள்ளது.தெளிவான விபரங்களை பெறுவதற்காக செய்மதி படங்களை ஆராய்ந்துவருகின்றது.

மோதல்கள் ஆரம்பிப்பதற்கு முன்னர் காஸாவில் ஒரு மில்லியனிற்கும் மேற்பட்ட மக்கள் வசித்தனர்.

ஒக்டோபர் ஏழாம் திகதி ஹமாஸ் மேற்கொண்ட தாக்குதலின் பின்னர் இஸ்ரேல் காசாவின் மீது கடுமையான குண்டுவீச்சினை மேற்கொண்டுள்ளது.

பொதுமக்களை சலால் அல் டினான் வீதியை பயன்படுத்துமாறு இஸ்ரேல் கேட்டுக்கொண்டுள்ளது.

காசாவின் தென்பகுதியில் பொதுமக்கள் பாதுகாப்பாக இருப்பார்கள் என இஸ்ரேலிய பாதுகாப்பு படையினர் தெரிவித்தாலும் அவர்கள் அங்கும் குண்டுவீச்சில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த புதன் கிழமை அகமட் ஜெயாடா தனது இடம்பெயர்வு குறித்து பிபிசியின் உள்ளூர் பத்திரிகையாளருக்கு கருத்து தெரிவித்தார். வடபகுதியில் உள்ள அல் நசாரிலிருந்து அவர் வெளியேறியுள்ளார்.

தனது கைக்குழந்தையுடன் பயணித்துக்கொண்டிருந்த அவர் நாங்கள் மிகவும் களைப்படைந்துள்ளோம் என்ன செய்வது எங்கு போவது என தெரியவில்லை யாரிடம் போவது எங்களை காப்பாற்றுங்கள் என யாரிடம் தெரிவிப்பது என கேள்வி எழுப்பியுள்ளார்.

காசாவின் வடபகுதியில் உள்ள அல்ஜெய்டவுனிலிருந்து மஹ்மூட் கஜாவி தப்பி வெளியேறியுள்ளார். தொடர்ச்சியான குண்டுவீச்சுக்களே இதற்கு காரணம்.

மதியம் தனது வீட்டிலிருந்து வெளியேறிய அவர் ஐந்து மணித்தியாலங்களாக நடந்துகொண்டிருக்கின்றார் - எங்கு போவது என்பது தெரியவில்லை என அவர் குறிப்பிட்டார்.

வீதியோரங்களில் உயிரிழந்தவர்களின் உடல்கள் காணப்படுகின்றன என அவர் தெரிவித்தார்.

பெரும்பாலானவர்கள் நடந்தே செல்கின்றனர் இஸ்ரேலிய இராணுவம் அவர்களை வாகனங்களை காசா நகரத்தின் தென்பகுதியின் எல்லையில் விட்டுவிட்டுச்செல்லுமாறு பணித்துள்ளது என ஐநா தெரிவித்துள்ளது.

செல்லும் வழியில் நான் பல சடலங்களை பார்த்தேன் வீதியின் கிழக்கு பகுதியில் இஸ்ரேலிய டாங்கிகளையும் பொதுமக்களையும் காணமுடிகின்றது ( நெட்சாரிமிற்கு அருகில்) அவர்கள் எங்களை நோக்கி வரவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

நான் உடல்களை உடல்பாகங்களை பார்த்தேன் என அவர் தெரிவித்துள்ளார். டெலிகிராமில் வெளியாகியுள்ள மற்றுமொரு வீடியோவில் பெண்ணொருவர் வீதியில் உடல்கள் குறித்து தெரிவித்துள்ளார்.

நான் நெட்ஜாரிம் சந்தியில் எனது மகனை தேடினேன் தென்பகுதி நோக்கி செல்லும்போது வீதியில் ஏனையவர்களின் உடல்களிற்கு மத்தியில் அவரின் உடலை பார்த்தேன் என அந்த பெண் குறிப்பிட்டுள்ளார். நான் இஸ்ரேலிய டாங்கிகளை கண்டேன் அவற்றை நான் கவனத்தில் கொள்ளவில்லை திரும் பிபார்த்தபோது எனது மகனின் உடலை பார்த் தேன் அவரது கையடக்க தொலைபேசி உடல்களை வைத்து அவற்றை அடையாளம் கண்டேன் என அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட் பெண் முதல்நாள் அல்அக்சா மருத்துவம னைக்கு சென்று தனது மகனை தேடினார் அவர் தனது மகன் இறந்துவிட்டதாக பதிவு செய்தார் அன்றே அவரது மகனின் உடல் அடக்கம் செய்யப்பட்டது என உள்ளூர் பத்திரிகையாளர் தெரிவித்துள்ளார்.

எனினும் சலா அல் டின் வீதிகளில் உடல்கள் காணப்படும் வீடியோக்கள் எவற்றையும் பார்க்க வில்லை என பிபிசி தெரிவித்துள்ளது. (அ)

# 2024 முற்பகுதியில் பொதுத் தேர்தல்!

## மலையக கட்சிகளும் ஆதரவு

கொழும்பு, நவ. 13

**2024 முற்பகுதிக்குள் பொதுத்தேர்தல் நடத்தப்படுவதற்கான சாத்தியம் பிரகாசமாக தென்படுவதாக அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.**

தற்போதைய பாராளுமன்றத்தின் பதவிகாலம் 2025 ஆம் ஆண்டுவரை இருந்தாலும், ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தலை நடத்தும் நிலைப்பாட்டில் ஜனாதிபதி இருப்பதால் பாராளுமன்றம் முன்கூட்டியே கலைக்கப்படும் எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலை, முதலில் ஜனாதிபதி தேர்தலை நடத்தினால் ஏற்படும் அரசியல் ரீதியிலான தாக்கங்கள் உள்ளிட்ட காரணிகளைக் கருத்திற்கொண்டே, அவசர பொதுத்தேர்தல் நடத்தப்படலாம் என தெரியவருகின்றது.

அதேவேளை, முன்கூட்டியே பொதுத்தேர்தல் நடத்தப்படுமானால் அதனை வரவேற்போம், அத்தேர்தலில் நிச்சயம் வெற்றி பெறுவோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பங்காளிக்கட்சியான தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

(அ)

இலஞ்சக் குற்றச்சாட்டு;

## மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் பணியிலிருந்து இடைநிறுத்தம்!




கொழும்பு, நவ. 13

இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் சுபுன் எஸ். பத்திரகேவின் சேவை உடனடியாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக சுற்றாடல் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இலஞ்ச விவகாரம் தொடர்பில் கைது செய்யப்பட்ட மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் சுபுன் எஸ். பத்திரகே மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அனுருத்த பொல்கம்பால உள்ளிட்ட மூவர் இம்மாதம் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையிலேயே அவரை பணியிலிருந்து இடைநிறுத்த அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

கப்பலிலிருந்து அகற்றப்பட்ட கச்சா எண்ணெய் சுத்திகரிப்புக்காக சுற்றுச்சூழல் பாதுகாப்பு அனுமதியைப் பெறுவதற்கு இலஞ்சம் கோரப்பட்டமை தொடர்பில் பிரபல தொழிலதிபர் ஒருவர் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் அண்மையில் முறைப்பாடு செய்திருந்தார்.

(அ)

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் வருட முற்பகுதியில் பாராளுமன்றில்

கொழும்பு, நவ. 13

அடுத்துவரும் புத்தாண்டின் முற்பகுதியில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கருத்துவெளியிடும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் சம்பந்தமாக சிவில் மற்றும் இதர தரப்புக்களுடன் கலந்துரையாடும் செயற்பாடுகளுக்காக அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் செயற்பாடுகள் தாமதப்படுத்தப்பட்டுள்ளன என்றும் தற்போது அந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு, அவர்களின் அபிப்பிராயங்கள் மற்றும் முன்மொழிவுகள் அனைத்தும் உள்ளடக்கப்பட்டே வரைவு இறுதி செய்யப்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

(அ)

## பண மோசடிச் சம்பவங்கள் தொடர்பில் பொதுமக்களுக்கு பொலிஸ் எச்சரிக்கை

கொழும்பு, நவ. 13

உறவினர் ஒருவருக்கு உடல்நிலை சரியில்லை என்று கூறி போலி தொலைபேசி அழைப்புகள் மூலம் பண மோசடி செய்யும் சம்பவங்கள் இடம்பெறுவது தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

எனவே, இவ்வாறான தொலைபேசி அழைப்புக்களை நம்பி பணத்தை கொடுத்து மோசடி நடவடிக்கைகளில் சிக்க வேண்டாம் எனவும் பொதுமக்களிடம் கேட்டுக்கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

தெரியாத ஒரு நபரிடமிருந்து இது தொடர்பில் தொலைபேசி அழைப்பு வந்தால் அதனைச் சரிபார்க்கவும். இந்தப் பணத்தைக் கேட்பவர் உண்மையான நோக்கத்துக்காகவா இதைக் கேட்கிறார் என்பதை முறையாக உறுதிப்படுத்த வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

(அ)

## கடல் அட்டைகளுடன் மன்னாரில் இருவர் கைது

மன்னார், நவ. 13

மன்னாரிலிருந்து சட்டவிரோதமாக கடலட்டை எடுத்துச் சென்ற இருவர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களுக்கு எதிராக சட்ட நடவக்கையை மன்னார் பொலிசார் மேற்கொண்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை மன்னாரில் சட்டவிரோதமான முறையில் கடலட்டையை கொண்டு சென்ற இருவரே பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் நகருக்குள் நின்ற ஒரு முச்சக்கர வண்டியை சோதனையிட்டபோதே 49 கடலட்டைகளுடன் இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்விரு சந்தேக நபர்களும் மன்னார் விடத்தில்தீவைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிசார் தெரிவித்துள்ளனர். இவர்களுக்கு எதிராக பொலிசார் சட்ட நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

(அ)

## வவுனியா உடைப்பெடுத்த குளத்தால் 15 ஏக்கர் வயல் நிலங்களுக்கு பாதிப்பு



வவுனியா, நவ. 13

வவுனியா ஆசிகுளம் கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட கோமரசங்குளம் பகுதியிலுள்ள குளமொன்று உடைப்பெடுத்தமையினால் அதன் கீழுள்ள 15 ஏக்கர் வயல் நிலங்கள் நீரில் மூழ்கி பாதிப்படைந்துள்ளமையுடன் குளத்தின் நீர் தொடர்ந்தும் வெளியேறிய வண்ணமுள்ளது.

மாவட்டத்தின் கடந்த சில நாட்களாக தொடரும் மழையுடனான காலநிலையினால் பல குளங்களின் நீர்மட்டம் உயர்வடைந்து காணப்பட்ட நிலையிலேயே இவ் குளம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை உடைப்பெடுத்துள்ளது.

ஊர் மக்கள் பல மணிநேரமாக குளத்தின் உடைபெடுத்த பகுதியினை மண்நிரப்பி கட்டுப்படுத்த முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் அவை பயனளிக்கவில்லை.

கோமரசங்குளம் பகுதியிலுள்ள இவ் குளம் நீண்ட காலமாக எவ்வித புனரமைப்பு பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை. என்பதுடன் குளத்தின் கீழ் 35ஏக்கர் வயல் நிலங்கள் காணப்படுகின்ற போதிலும் தற்போது 15 ஏக்கர் வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளது.

இவ் அனர்த்தம் தொடர்பில் உரிய தரப்பினர்களுக்கு தகவல் வழங்கியமையுடன் இவ் குளத்திலிருந்து வெளியேறும் நீரினை கட்டுப்படுத்த விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(அ)

## ஜனாதிபதி ரணில் தலைமையில் ஆயுதப்படையினர் நினைவு தினம்



கொழும்பு, நவ. 13

முதலாம் உலகப் போரில் இருந்து இன்று வரை தாய்நாட்டின் பாதுகாப்பிற்காக உயிர்த்தியாகம் செய்த போர்வீரர்களை நினைவு கூர்ந்து கௌரவிக்கும் முகமாக, இலங்கை முன்னாள் பாதுகாப்பு படைவீரர்கள் சங்கம், ஆயுதப்படைகளுடன் இணைந்து ஆண்டுதோறும் ஏற்பாடு செய்யும் "ஆயுதப்படையினர் நினைவு தினம் - 2023" பிரதான வைபவமும் பொப்பி மலர் தின நிகழ்வும் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் கொழும்பு விஹார மகாதேவி பூங்காவில் அமைந்துள்ள இராணுவ நினைவுத் தூபியின் முன்பாக முப்படைகளின் தளபதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்றது.

முதலாம் மற்றும் இரண்டாம் உலகப் போர்களில் வீரமரணம் அடைந்த போர் வீரர்களை நினைவு கூரும் வகையில், கொழும்பு விஹார மகாதேவி பூங்காவில் உள்ள இராணுவ நினைவுத் தூபி நிர்மாணிக்கப்பட்டு 100 ஆண்டுகள் நிறைவடைந்ததை கொண்டாடும் நிகழ்வும் இங்கு இடம்பெற்றது.

நிகழ்வு நடைபெறும் இடத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை, இலங்கை முன்னாள் பாதுகாப்பு படைவீரர்கள் சங்கத்தின் தலைவர் மேஜர் ஜெனரல் உபுல் பெரேரா (ஓய்வு பெற்ற) வரவேற்றார்.

சர்வ மத அனுஷ்டானங்களின் பின்னர் ஆயுதப்படையினர் நினைவு தின வைபவம் ஆரம்பமானது. வீரமரணம் அடைந்த போர் வீரர்களின் நினைவாக ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், ஜனாதிபதி உட்பட அதிதிகள் மற்றும் முன்னாள் படைவீரர்கள் சங்கப் பிரதிநிதிகள் இராணுவ நினைவுத் தூபிக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

இராணுவ நினைவுத் தூபியின் விசேட நூற்றாண்டு நினைவுப் பலகையை ஜனாதிபதி திறந்து வைத்தார். இராணுவ நினைவுத் தூபியின் 100 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியிடப்பட்ட விசேட நினைவு முத்திரை மற்றும் முதல் நாள் அட்டையை வெகுசன ஊடக இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார மற்றும் தபால் மா அதிபர் ருவன் சத்குமார ஆகியோர் ஜனாதிபதிக்கு வழங்கி வைத்தனர்.

(அ)

## வங்கக்....

வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வுகள் உருவாகி மழை பெய்வது வழமையானது.

ஏற்கனவே கடந்த வாரம் வங்கக்கடலில் உருவான காற்றுச்சுழற்சி மேற்கு நோக்கி நகர்ந்து அரபிக்கடலில் வலுவடைந்து மேற்கு நோக்கி நகர்ந்தது.

இந்த நிலையில், தற்போது வங்கக் கடலில் அந்தமான் மற்றும் இலங்கைக்கு இடையே தென்கிழக்கு வங்கக்கடலில் காற்றுச்சுழற்சி உருவாகியுள்ளது." - என்றுள்ளது.

## தேசிய....

தபால் முத்திரை வெளியிட்டு வைக்கப் பட்டது.

இந்துக்களின் தீபாவளி தினத்தை முன்னிட்டு இத்தபால் முத்திரை இலங்கை தபால் திணைக்கள அத்தியட்சகர் றுவான் சரத்குமார வெளியிட்டு வைக்க முதல் முத்திரையை இந்து காலாசார அமைச்சர் விதுர விக்கிரம நாயக்க பெற் றுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து அதிதிகளாக கலந்து கொண்ட கிராமிய அபிவிருத்தி இரா ஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபன், வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர ஆகியோருக்கு தபால் முத்திரை வழங்கி வைக்கபபட்டதுடன், மதகுருமாருக்கும் வங்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் இலங்கை தபால் திணைக்கள அத்தியட்சகருடன் வடமாகாண தபால் திணைக்கள அத்தியட்சகர் மதுமதி வசந்தகுமார் மற்றும் திணைக்களத்தின் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (அ)

## இன்று....

ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, ஜனாதிபதியின் ஆலோசகர் சமன் அதாவுதஹெட்டி, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிரிவர்தன, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, ஜனாதிபதி ஊடகப் பணிப்பாளர் நாயகம் தனுஷ்க ராமநாயக்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் மதுஷங்க திசாநாயக்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்ட உரை நாளை நண்பகல் 12 மணிக்கு நிதி அமைச்சரும் ஜனாதிபதியுமான ரணில் விக்ரமசிங்கவினால் இன்று திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதி அமைச்சை பொறுப்பேற்றதன் பின்னர் சமர்ப்பிக்கும் இது இரண்டாவது வரவு செலவு திட்டமாகும்.

இம்முறை வரவு - செலவு திட்டத்தில் அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வு, வசதி குறைந்த மக்களுக்கு நிவாரண திட்டங்கள், தொழில் முயற்சியாளர்களுக்கான கடன் வசதிகள் என பல முன்மொழிவுகள் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றன

அத்துடன் அரசாங்கத்துக்கு வருமானத்தை அதிகரித்துக்கொள்ள வரி அதிகரிப்பும் இடம்பெறும் என எதிர்பார்க்கப் படுகிறது.

மேலும் வரவு - செலவுத்திட்ட விவாதம் செவ்வாய்க்கிழமை 14ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை ஞாயிறு தினங்கள் தவிர்ந்து 7 நாட்கள் இடம் பெறவுள்ளது.

அத்துடன், வரவு செலவுத்திட்ட இரண்டாம் மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அதனையடுத்து, குழுநிலை விவாதம் எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை முதல் டிசம்பர் 13 ஆம் திகதி புதன் கிழமை வரை ஞாயிறு தினங்கள் தவிர்ந்து 19 நாட்கள் இடம்பெறவுள்ளது.

அதற்கமைய, 2024 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத்திட்ட மூன்றாம் மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு டிசெம்பர் 13 ஆம் திகதி புதன்கிழமை மாலை 6.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.(அ)

## அம்பாந்தோட்டை....

விசேட ஊடக சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில்,

அம்பாந்தோட்டை துறைமுகத்தினால் எந்தவித இலாபமும் ஈட்டப்படாத காரணத்தினால் அரசாங்கத்துக்கு இலாபப் பங்கு எதுவும் கிடைக்கவில்லை என தெரியவந்துள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் மொத்த பங்குகளில் 15 சதவீத பங்குகளை இலங்கை துறைமுக அதிகாரசபை கொண்டுள்ளது.

இதுவரையில், இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களை துறைமுகத்தில் நிறுத்தி, அவற்றை மீள் ஏற்றுமதி செய்வதே அம்பாந்தோட்டை துறைமுகத்தின் பிரதான செயற்பாடாக இருந்து வந்துள்ளது.

எவ்வாறாயினும், எதிர்வரும் காலங்களில் கொள்கலன்களை மீள் ஏற்றுமதி செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது- என்றார். (அ)

## யாழில்....

தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை மாலை யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யாழ் நகரிலுள்ள முன்னணி பாடசாலையொன்றில் கல்வி பயிலும் மாணவர்களே தாக்குதல் நடத்தினர். தனியார் கல்வி நிலையத்தின் முன்பாக இந்த தாக்குதல் நடந்தது.

15, 16 வயதானவர்களே கைதாகியுள்ளனர். கைதான 4 பேருக்கு மேலதிகமாக, கொக்குவில் பகுதியை சேர்ந்த மேலும் 2 மாணவர்கள் கைது செய்யப்படவுள்ளனர். கைதான மாணவர்களில் சிலரது பெற்றோர் யாழ். நகரிலுள்ள முன்னணி வர்த்தகர்கள்.

இதனால், முன்னணி சட்டத்தரணிகள் பலர் நேற்று மாணவர்களிற்காக முன்னிலையாகினர். எனினும், யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் பிணை கோரிக்கையை நிராகரித்து, இன்று வரை அவர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

தாக்கப்பட்ட மாணவன், தான் ஏன் தாக்கப்பட்டேன் என்பதையே அறிந்திருக்கவில்லை. ஆள் மாறாட்டமாக தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் எனவும் கருதப்படுகிறது. காதல் விவகாரத்தினால் இந்த தாக்குதல் நடத்தப்பட்டதா என்ற கோணத்திலும் ஆராயப்படுகிறது. (அ)

## பெரிய....

எனவும், அடுத்த வருடம் தற்போதைய நிலையை விட கடினமாக இருக்கலாம். எனவே அடுத்த வருடத்தில் அதிக நம்பிக்கை வைக்க வேண்டாம்.

அதிக பணம் மீள்செலவினமாக வைத்திருக்க வேண்டியுள்ளது. சம்பளத்திற்காக 1,107 பில்லியன் ரூபாவே ஒதுக்கப்பட்டுள்ளது. அரச உத்தியோகத்தர்கள் பெரிய சம்பள உயர்வை எதிர்பார்க்க வேண்டாம்.

ஓய்வூதியத்திற்காக 386 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் படி ஓய்வூதியம் ஓரளவு அதிகரிக்கலாம்.

1,400 பில்லியன் கடன் மற்றும் வட்டி கொடுப்பனவுகளுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அடுத்த வருடம் (2024) அரச வருமானம் 4,127 பில்லியன் ரூபாவாக இருக்கும். 3,820 பில்லியன் ரூபாவை வரியாக பெற எதிர்பார்க்கப்படுகிறது.

அதன்படி, வரும் ஆண்டு தற்போதைய சூழ்நிலையை விட கடினமாக இருக்கும். மக்கள் தங்கள் வருமானத்தின் முக்கிய பகுதியை நேரடி அல்லது மறைமுக வரிகளாக செலுத்த வேண்டியிருக்கும் - என்றார். (அ)

## முல்லைத்தீவு....

சட்டவிரோத மான முறையில் அமைத்து புலி பாய்ந்தகல் கடற்பரப்பை முற்றுமுழுதாக அபகரிக்கும் நோக்கில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அமைக்கப்பட்ட சுமார் நான்கு வாடிக ளிலும் சுமார் 16 பேர் வரை தங்கி அன்று தொழில் செய்து வரும் நிலையில் குறித்த வாடிகளில் மது விருந்துகள் இடம்பெற்றதற்கான ஆதாரங்களும் காணப்படுகின்றன.

முல்லைத்தீவை பூர்வீகமாக கொண்ட மீனவர்கள் பரம்பரை பரம்பரையாக தொழில் செய்து வரும் கடற் பகுதியும் அதனோடு சேர்ந்த சுமார் 100 ஏக்கர் காணியையும் தெற் கைச் சேர்ந்தவர்களை குடியமர்த்துவ தற்காகான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன்றன.

இதன் பின்புலத்தில் பௌத்த மதத் தலைவர் ஒருவரின் கண்காணிப்பில் மக்களை குடியேற்றுவதற்கான திட்டங்கள் முழு வீச்சில் இடம் பெற்று வருவதாக அப்பகுதி மீனவர்கள் அச்சம் வெளியிடுகின்றனர்.

தமது பாரம்பரிய கடல் பகுதி பறிக்கப்பட்டு தெற்கு மீனவர்களை அடாத்தாக தமது கடற் பகுதிக்குள் அனுமதித்து நிரந்தரமாக குடியேற்றங்களை அமைக்கும் திட்டம் தீட்டப்படுகிறது.

தமிழர் பகுதியான வெலி ஓயா பகுதி சிங்கள மயமாக்கப்பட்டுள்ள நிலையில் அப் பகுதியில் உள்ள சுமார் ஆறு க்கு மேற்பட்ட குளங்களில் தமிழ் மீனவர்கள் நன்னீர் மீன் படியில் ஈடுபட்டு வந்தனர் .

மகிந்த ஜனாதிபதியாக இருந்த காலப் பகுதியில் வெலி ஓயா பகுதியில் தமிழ் மக்களின் எதிர்ப்பை மீறி பெரும்பான்மை இனத்தவர்களுக்கான காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

குறித்த பகுதியில் வளமான சுமார் ஆறு நன்னீர் குளங்கள் காணப்படுகின்ற நிலையில் அதன் சூழ உள்ள பகுதிகள் ஆங்கிலேயர் காலத்து உறுதிப் பத்திரங்கள் தமிழ் மக்களிடம் காணப்படுகின்றன.

இவ்வாறான நிலையில் அப் பிரதேசத்தில் அடக்காத சிங்கள குடியேற்றங்களை நிறுவி தமிழ் மக்களின் பரம்பரையான நன்னீர் மீன்பிடியை இல்லாமல் ஆகிவிட்டார்கள்.

தற்போது முல்லைத்தீவு மாவட்ட மீனவ மக்களின் வாழ்வாதார தொழிலாக காணப் படும் புலிபாய்ந்த கல் பகுதியின் கடல் வளத்தையும் நில வளத்தையும் தெற்கைச் சேர்ந்தவர்களுக்கு தாரை வார்க்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதற்கு உடந்தையாக சில அதிகாரிகள் செயற்பாட்டு வருவதை அறியக் கூடியதாக உள்ளது.

ஏனெனில் பரம்பரையாக தொழில் செய்து வந்த மீனவர்கள் குறித்த கடற் பகுதியில் வாடிகள் அமைப்பதற்கு உரிய அனுமதிகளை சமர்ப்பித்த போதும் அதிகாரிகள் இழுத்தடிப்புச் செய்து வருகின்றனர்.

சட்டவிரோதமான முறையில் வாடிகளை அமைத்த தெற்கு மீனவர்களுக்கு எச்சரிக்கை கடிதம் ஒட்டப் பட்டும் அதனை அகற்றுவ தற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

ஆகவே புலி பாய்ந்த கல் பகுதியின் கடல் வளத்தையும் நிலவளத்தையும் பாதுகாப்பதற்கு அதிகாரிகளும் அரசியல் வாதிகளும் கரிசனையோடு செயல் பட வேண்டும் என கோரிக்கை முன் வைத்தனர். (அ)

## இலங்கையில்....

சந்திப்பை முன்னிட்டு ரோமிற்கு வருகை தந்துள்ள கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இலங்கையின் தற்போதைய நிலை குறித்து பீதேஸ் என்னும் கத்தோலிக்க செய்தி நிறுவனத்திற்கு வழங்கிய பேட்டியின்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அண்மைய ஆண்டுகளில் இலங்கையானது அரசியல், சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்னைகளை எதிர்கொண்டு வரும் சூழலில் நாட்டின் நிலைமையில் எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை என்றும், மக்களிடையே அமைதியற்ற சூழலையும் அதிருப்தியையும் உருவாக்கும் நோக்கத்தில் கடுமையான சமூகக் கட்டுப்பாட்டு முறைகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன என்றும் அவர் கூறியுள்ளார்.

நாட்டில் ஜனநாயக சூழலை உருவாக்கவும் சாதாரணமாக நடைமுறைப்படுத்தவும் கடுமையான இடையூறுகளை அனுபவித்து வருவதாக எடுத்துரைத்துள்ள கர்தினால், பாதிக்கப்படும் கத்தோலிக்க மக்கள் மட்டுமல்லாது ஒட்டுமொத்த இலங்கை நாட்டில் வாழும் மக்களையும் நினைவு கூர்வதாக மல்கம் எடுத்துரைத்துள்ளார்.

சமூக மற்றும் பொருளாதார நெருக்கடியினால் பல குடும்பங்கள் பாதிக்கப்படுகின்றனர் என்றும், மொத்த மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு மக்கள் நாளொன்றிற்கு ஒருமுறை மட்டுமே உணவு உண்ணும் சூழலில் இருக்கின்றனர் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் வாழும் பௌத்தர்கள், இந்துக்கள் என அனைத்து மதத்தலைவர்களுடனான உரையாடலில் ஒன்றிணைந்து நல்லுறவைப் பேணிக்காப்பதாக எடுத்துரைத்துள்ள அவர், இப்பாதை கடினமானதாகத் தோன்றினாலும் தொடர்ந்து தங்களது பங்கைச் செய்வோம், எப்போதும் மக்கள் பக்கம் இருப்போம் என்றும், நம்பிக்கையுடன் பொதுநலனுக்காக உழைத்து, நற்செய்தியின் உண்மைக்கு சாட்சியாக இருப்போம் என்றும் அவர் கூறியுள்ளார்.



இலங்கை அரசிற்கு எதிரான அணி வகுப்பு, சமூகப் போராட்டம் ஆகிய வற்றைக் கட்டுப்படுத்த இராணுவத்தை நிலைநிறுத்தும் அரசின் செயல்களை சுட்டிக்காட்டியுள்ள கர்தினால், 2024 இல் திட்டமிடப்பட்டுள்ள அரசியல் தேர்தல்கள் மிக முக்கியமானதாகவும், மக்களின் விருப்பத்தை வெளிப்படுத்துவதாகவும் அமையும் என்றும் மல்கம் ரஞ்சித் தெரிவித்தார்.

(அ)

## ஜனாதிபதி....

இந்நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதிக்கு இந்து சமய கலாசார முறைப்படி வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நிகழ்வில் கலந்து கொண்ட இந்துக்களுக்கு தீபாவளி வாழ்த்துக்களை தெரிவித்ததோடு அவர்களுடன் சிநேக பூர்வ உரையாடலில் ஈடுபட்டார்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆர். யோகராஜா மற்றும் விசேட விருந்தினர்கள், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்க நாயக்க உட்பட ஜனாதிபதி அலுவலக உயர் அதிகாரிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ)

ஈழநாடு
Eelanadu

# இலங்கை கிரிக்கெட்டை சீரழிக்கின்றார் இந்தியர்!

## அர்ஜுன ரணதுங்க குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 13

இலங்கை கிரிக்கெட்டில் ஏற்பட்டுள்ள பிரச்னைகளுக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் செயலாளர் ஜெய் ஷா பொறுப்பு என்று, 1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வென்ற இலங்கை அணித் தலைவர் அர்ஜுன ரணதுங்க குற்றம் சாட்டியுள்ளார்.

யூடியூப்பில் வெளியிடப்பட்ட ஒரு நேர்காணலில், ரணதுங்க இலங்கை கிரிக்கெட் அதிகாரிகளுடன் நெருங்கிய தொடர்பு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு அடிபணியும் சூழ்நிலையை உருவாக்கியது என்று குற்றம் சாட்டினார்.

"இலங்கை கிரிக்கெட் அதிகாரிகளுக்கும் ஜெய் ஷாவிற்கும் இடையே உள்ள தொடர்பு காரணமாக அவர்கள் இலங்கை கிரிக்கெட் சபையை மிதித்து கட்டுப்படுத்த முடியும் என்ற எண்ணத்தில் உள்ளனர்" என்று ரணதுங்க கூறினார்.

"ஜெய் ஷா இலங்கை கிரிக்கெட்டை நடத்தி வருகிறார். ஜெய் ஷாவின் அழுத்தத்தால் இலங்கை கிரிக்கெட் சீரழிந்து வருகிறது. இந்தியாவில் உள்ள ஒருவர் இலங்கை கிரிக்கெட்டை சீரழிக்கிறார்" என்று ரணதுங்க கூறினார்.

"அவர் இந்தியாவின் உள்துறை அமைச்சராக இருக்கும் அவரது தந்தையால் மட்டுமே சக்திவாய்ந்தவர்."

இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்தில் அரசியல் தலையீடு இருப்பதாகக் கூறி, சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் கடந்த வெள்ளிக்கிழமை இலங்கை கிரிக்கெட் இடைநீக்கம் செய்யப்பட்டது.

இந்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் மகன் ஜெய் ஷா. இலங்கை கிரிக்கெட்டின் ஊழல் நிர்வாகத்தின் தனிப்பட்ட கோரிக்கையை ஏற்று, அவர் தனது செல்வாக்கின் மூலம் இலங்கையை சர்வதேச கிரிக்கெட் சபையிலிருந்து இடைநீக்கினார் என முன்னதாக தகவல் வெளியாகியிருந்தது. (அ)

# பொருளாதார வங்குரோத்துக்கு அதிக கடனே பிரதான காரணம்!

## சுட்டிக்காட்டுகின்றார் சந்திரிகா



கொழும்பு, நவ. 13

**கடன் வழங்கி எம்மை நசுக்கி இந்து சமூத்திரத்தின் மூலோபாய நன்மைகளை பெற்றுக்கொள்ளவே மேற்கத்தேய நாடுகள் முயற்சிக்கின்றன. இந்த கடன்கள் மூலம் அபிவிருத்தி செய்ய சந்தர்ப்பம் கிடைத்த போதிலும் அவ்வாறான ஒன்று தேவையில்லை. இதுவும் பொருளாதார வங்குரோத்து நிலைக்கு மற்றொரு காரணம் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.**

சர்வதேச கொள்கைகளை உருவாக்கும் போது இது தொடர்பில் அதிக கவனம் செலுத்தவேண்டும் எனவும் சர்வதேச அரங்கில் எமது கோட்பாடுகளுக்கு அமைய ஆற்றல் மிக்க அடையாளத்தை உருவாக்க வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ் வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எம்மை நசுக்கி, இல்லாமல் செய்து இந்து சமூத்திரத்தின் மூலோ பாய நன்மைகளை பெற்றுக் கொள்ளவே மேற்கத்தைய நாடுகள் முயற்சிக்கின்றன.

தற்போது அந்த நாடுகள் பயன்படுத்தும் மூலோபாயங்கள் முன்னரை விட வேறுபட்டவை. இன்று அவற்றை ஆக்கிரமிப்பு என கூறுவது இல்லை. அதனை கடன் வழங்குதல் என குறிப்பிடுகின்றனர்.

இரு நிபந்தனைகளுடன் கடன்கள் வழங்கப்படுகின்றன. இந்த நிபந்தனைகள் இலகுவானதாக இருந்த போதிலும் அதனால் நாம் பொருளாதார ரீதியாக நசுக்கப்படுகின்றோம்.

அதற்கு மற்றுமொரு பெயரே அபி விருத்திக்கான முதலீடு. அபி விருத்திக்கான முதலீடுகள் இரண்டு வகைப்படும். ஒன்று மிகவும் தாரா ளமானவர்கள்.

இந்த தாராளமானவர்கள் அபிவிருத்திக்கு அதிக கடன்களை வழங்கி நாட்டை மேம்படுத்த உதவுகின்றனர். மற்றைய பிரிவினர் எமக்குத் தேவையான நிதியை கோரிய உடனேயே வழங்குபவர்கள்.

இந்த கடனுக்கு அதிக வட்டி வீதம் அறவிடப்படுகிறது. இதன் மூலம் அனைத்தையும் அபிவிருத்தி செய்ய சந்தர்ப்பம் கிடைத்த போதி லும் அவ்வாறான ஒன்று தேவையில்லை. இதுவே பொருளாதார வங்குரோத்து நிலைக்கு மற்றொரு காரணமாகும்.

எமது சர்வதேச கொள்கைகளை உருவாக்கும்போது இது தொடர்பில் அதிக கவனம் செலுத்தவேண்டும். சர்வதேச அரங்கில் எமது கோட்பாடுகளுக்கு அமைய ஆற்றல் மிக்க அடையாளத்தை உருவாக்க வேண்டும்.

தேசிய வளங்களையும், பொருளாதாரத்தையும் பாதுகாக்கவேண்டும். எமது கலாசார பாரம்பரியத்தை பாதுகாக்கவேண்டும் - என்றார். (அ)

# நெருக்கடியைப் பயன்படுத்தி தேசிய சொத்துகள் விற்பனை

## விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 13

லிட்ரோ மற்றும் மில்கோ நட்டமடையும் நிறுவனங்கள் அல்ல. நெருக்கடியை பயன்படுத்தி எம்மால் இதனை செய்ய முடியாது என கூறி தேசிய சொத்துக்களை வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்யும் திட்டத்தை முன்னெடுத்துள்ளனர். அது தொடர்பில் எம்மால் திருப்தியடை முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

தேசிய சொத்துக்கள் விற்பனை செய்யப்படுகின்றமை, அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் தெளிவுப்படுத்தும் மாநாடொன்றை மேலவை இலங்கை கூட்டணி கொழும்பில் ஏற்பாடு செய்திருந்திருந்தது. இதன்போது கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்-

லிட்ரோ நிறுவனம் நட்டமடையும் நிறுவனமொன்று அல்ல. அந்த நிறுவனத்தினால் 6 பில்லியன் ரூபா திறைசேரிக்கு வழங்கப்படுகிறது. இருப்பினும் அந்த நிறுவனத்தையும் தற்போது தனியாருக்கு விற்பனை செய்யப்பார்க்கின்றனர். மின்சக்தி நிறுவனங்கள் விற்பனை செய்யப்படும் செயற்பாடு நாட்டின் அரசியல் இருப்பை கேள்விக்குறியாகியுள்ளது. சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்பு சம்பவங்கள் கோட்டாபய வீட்டுக்கு செல்வதற்கு வித்திட்ட பிரதான காரணியாக அமைந்தது.

இருப்பினும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவிக்கு வந்ததன் பின்னர் ஒரு சமையல் எரிவாயு சிலிண்டரும் வெடிக்கவில்லை அல்லவா? தேவை ஏற்பட்டால் வெடிக்க வைக்க முடியும். மில்கோ நிறுவனமும் நட்டமடையும் நிறுவனம் அல்ல. நெருக்கடியை பயன்படுத்தி தேசிய சொத்துக்களை வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்யும் திட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

அது தொடர்பில் எம்மால் திருப்தியடை முடியாது எம்மால் இதனை செய்ய முடியாது என கூறி தனியாருக்கு வழங்குகின்றனர். 3 தசாப்தங்களாக காணப்பட்ட யுத்தத்தை எம்மால் வெற்றிக்கொள்ள முடியும் என்றால் இந்த பொருளாதார நெருக்கடிகளிலிருந்தும் எம்மால் மீண்டெழ முடியும்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் தீர்மானமிக்க ஒன்றாகும். மேலவை இலங்கை கூட்டணி தீர்மானமிக்கதும், தெளிவான கொள்கைகளை வகுத்தும் ஜனாதிபதி தேர்தலுக்கு முகங்கொடுக்கும். தோல்வியடைந்த மற்றும் நாடு தொடர்பில் எந்தவொரு பற்று இல்லாதவர்கள் மூலம் நாட்டுக்கு பாரிய அழிவு மாத்திரமே ஏற்படும் - என்றார். (அ)

# மரண அறிவித்தல்



தோற்றம்
29 - 06 - 1956

மறைவு
09 - 11 - 2023

## தொம்மைப்பிள்ளை யேசுரத்தினம்

4ஆம் வட்டாரம், எழுவைதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தொம்மைப்பிள்ளை யேசுரத்தினம் 09.11.2023 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தொம்மைப்பிள்ளை – அந்தோன யாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற யோன்பிள்ளை மற்றும் லூர்து திரேசா தம்பதியரின் அன்பு மருமகனும், மேரிகில்டாவின்சியின் அன்புக் கணவரும், ஜெசிந்தினி. ஜெவிந்திரன் (பிரான்ஸ்), ஜெயின்சன், றஞ்சினி, புனிதா. அன்ரனிக்கா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெனிதா, கோபிநாத், றொமேக்சன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கோவின்சியா, றொக்சின் ஆகியோரின் அன்புப் பேரனும், அமலோற்பமரியபுஸ்பம் (அமரர்), பத்திமாபாக்கியராணி (செல்லம்மா), அன்ரனி இடோலிற் (ராசா), காலஞ்சென்றவர்களான அந்தோனிதாஸ் (தவம்), பிரானசிஸ் ஆகியோரின் சகோதரரும், அன்ரனி யேசுதாசன் (அமரர்), ஜான்சன், குயின், நிக்சன், நெல்சன், கொன்சி (பிரான்ஸ்), ஜான்சி, குயின்சி, றஞ்சி (அமரர்), ஜொய்சி (அமரர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை நாளை (14.11.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று. எழுவைதீவு புனித தோமையார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, புனித தோமையார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4ஆம் வட்டாரம்,
எழுவைதீவு.

தகவல்:
**குடும்பத்தினர்**

தொடர்புகளுக்கு:
**076 284 8579**
**077 804 4451**

# முன்பள்ளி ஆசிரியையிடம் கப்பம் கேட்ட கிராம சேவையாளருக்கு விளக்கமறியல்!

கொழும்பு, நவ. 13

ஹோமாகம பிடிபன, சுபாபபுதுகம பிரதேசத்தில் முன்பள்ளி ஆசிரியை ஒருவரின் பிள்ளைகளை கொன்று விடுவதாக மிரட்டி 20 இலட்சம் ரூபா கப்பம் கேட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட கிராம சேவகரை 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஹோமாகம பதில் நீதவான் பந்து லியனகே உத்தரவிட்டுள்ளார்.

ஹோமாகம, பிட்டிபன தெற்கு பகுதியைச் சேர்ந்த ருவன் குமார என்ற கிராம சேவகரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஹோமாகம, சுவபுதுகம பிரதேசத்தில் முன்பள்ளி ஆசிரியை ஒருவரிடம் 20 இலட்சம் ரூபா கப்பம் தராவிட்டால் மூன்று பிள்ளைகளையும் கொன்று விடுவதாக அச்சுறுத்தியமை தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்த போது, அதே பிரதேச கிராம சேவகர் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.11.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# பாகிஸ்தானுடன் வென்றிருந்தால் நிலைமை வேறு மாதிரியாக இருந்திருக்கும்



பாகிஸ்தான் அணியை வென்றிருந்தால் உலக கிண்ணப் போட்டிகளில் இலங்கை அணியின் பயணம் வேறு மாதிரியாக இருந்திருக்கும் என தெரிவித்துள்ள மஹேல ஜெயவர்த்தன பந்து வீச்சாளர்களின் உடற்தகுதி மற்றும் குறித்தும் கருத்து தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

நாங்கள் இந்தியாவிற்கு சென்றதும் ஆடுகளங்களை அவதானித்ததும் நாங்கள் மிகவும் சிறப்பாக விளையாட வேண்டும் சிறந்த வேகத்துடன் விளையாடவேண்டும் என்பதை உணர்ந்துகொண்டோம்.

நாங்கள் இது குறித்து துடுப்பாட்டவீரர்களுடன் கலந்துரையாடினோம்.

இலங்கை அணியின் துடுப்பாட்டவீரர்களிற்கு அது பழக்கமில்லாத விடயம் உலக கிண்ணத்திற்கு முன்னர் அவர்கள் அவ்வாறான பாணியில் விளையாடவில்லை

ஏனென்றால் நாங்கள் இலங்கையில் விளையாடிய ஆடுகளங்கள் நாங்கள் அவ்வாறு விளையாடுவதற்கு அனுமதிக்கவில்லை எங்களின் ஆடுகளங்கள் அவ்வாறானவை.

இது எங்களின் பலம் என்ன நாங்கள் எவ்வாறு விளையாடப்போகின்றோம் என்பது குறித்து எங்களை நாங்களே கேள்வி கேட்பதற்கான தருணம்.

உள்ளூர் போட்டிகள் மெதுவான ஆடுகளங்களில் விளையாடப்படுகின்றன இதன் காரணமாக சிறந்த ஆடுகளங்களில் துடுப்பாட்ட வீரர்கள் தங்கள் சொட்களின் தெரிவுகளை நம்பமாட்டார்கள். அவர்கள் அதற்கு பழகவில்லை.

ஆகவே உலககிண்ணத்தில் உயர்தர பந்துவீச்சிற்கு எதிராக விளையாடுவது மிகவும் சவாலான விடயமாக காணப்பட்டது.

இது குறித்து நாங்கள் கலந்துரையாடினோம் துடுப்பாட்ட வீரர்கள்வேகமாக ஆடுமுவதற்கு ஆடுவதற்கு அனுமதித்தோம்.

முதல் இரண்டுபோட்டிகளில் அவர்கள் சிறப்பாக விளையாடினார்கள் துரதிஸ்டவசமாக நாங்கள் வெற்றி பெறவில்லை.

என்னை பொறுத்தவரை எங்களின் நிலைமைய பாதித்த முக்கியமான போட்டி பாக்கிஸ்தானிற்கு எதிரானது நாங்கள் 340 ஓட்டங்களை பெற்றோம், ஆனால் அவர்களை கட்டுப்படுத்த முடியவில்லை

நாங்கள் அந்த போட்டியில் பாக்கிஸ்தான் அணியை கட்டுப்படுத்தியிருந்தால் அவ்வாறான ஒரு போட்டி தொடரில் நிலைமை வேறு மாதிரியானதாக இருந்திருக்கும் - நம்பிக்கை போன்றவைகள் வேறு மாதிரியானதாக காணப்பட்டிருக்கும்.

நாங்கள் ஒரு பந்து வீச்சு குழாமை உருவாக்கி பயன்படுத்த எண்ணியிருந்தோம். ஆனால் அந்த ஐந்து வீரர்களாலும் விளையாட முடியவில்லை.

அந்த ஐந்து பந்து வீச்சாளர்களும் கடந்த 16 மாதங்களில் ஒரு தொடரில் கூட ஒன்றாக எங்கள் அணிக்காக விளையாடவில்லை.

இது நாங்கள் கற்றுக்கொள்ளவேண்டிய விடயம் - எங்களின் சிறந்த வீரர்களை எப்படி காயங்கள் இல்லாமல் தக்கவைப்பது என்பது நாங்கள் கற்றுக்கொள்ளவேண்டிய விடயம்.

வீரர்களுக்கும் இதில் தனிப்பட்ட பொறுப்புள்ளது.

அவர்கள் தங்கள் உடற்தகுதி நிலையில் எவ்வாறு இறுக்கமான கட்டுப்பாட்டை பேணுவது என்பது குறித்து கவனம் செலுத்தவேண்டியது அவசியம் என அவர் தெரிவித்துள்ளார்.

# இங்கிலாந்துக்கு ஆறுதல் வெற்றி

பாகிஸ்தானுக்கு எதிராக கொல்கத்தா ஈடன் கார்டன்ஸ் விளையாட்டரங்கில் நேற்று முன் தினம் சனிக்கிழமை நடைபெற்ற உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து 93 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

ஏற்கனவே உலக சம்பியன் பட்டத்தைப் பறிகொடுத்திருந்த இங்கிலாந்து, தனது கடைசிப் போட்டியில் ஈட்டிய ஆறுதல் வெற்றியுடனும் பாகிஸ்தான் கடைசிப் போட்டியில் அடைந்த தோல்வியால் ஏமாற்றத்துடனும் நாடு திரும்பவுள்ளன.

பென் ஸ்டோக்ஸ், ஜோ ரூட், ஜொனி பெயாஸ்டோவ் ஆகியோர் குவித்த அரைச் சதங்கள் இங்கிலாந்தின் வெற்றிக்கு வித்திட்டிருந்தன.

நடப்பு உலக சம்பியனாக இந்த வருட உலகக் கிண்ணப் போட்டியில் பங்குபற்றிய இங்கிலாந்து ஆரம்பப் போட்டியில் நியூஸிலாந்திடம் தோல்வி அடைந்தது.

அடுத்த போட்டியில் பங்களாதேஷை வெற்றிகொண்ட இங்கிலாந்து அதன் பின்னர் தொடர்ச்சியாக 5 தோல்விகளைத் தழுவியது.

எனினும் கடைசி 2 போட்டிகளில் நெதர்லாந்தையும் பாகிஸ்தானையும் வெற்றிகொண்டு இங்கிலாந்து திருப்தி அடைந்தது.

பாகிஸ்தானுடனான தனது கடைசிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்த இங்கிலாந்து 50 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 337 ஓட்டங்களைக் குவித்தது.

இங்கிலாந்தின் முன்வரிசை வீரர்கள் திறமையாகத் துடுப்பெடுத்தாடி அணியை வலுவான நிலையில் இட்டனர்.

டாவிட் மலான், ஜொனி பெயாஸ்டோவ் ஆகிய இருவரும் 80 பந்துகளில் 82 ஓட்டங்களைப் பகிர்ந்து சிறந்த ஆரம்பத்தை இட்டுக்கொடுத்தனர்.

டாவிட் மாலன் 31 ஓட்டங்களையும் ஜொனி பெயாஸ்டோவ் 59 ஓட்டங்களையும் பெற்றனர்.

தொடர்ந்து 60 ஓட்டங்களைப் பெற்ற ஜோ ரூட்டும் 84 ஓட்டங்களைப் பெற்ற பென் ஸ்டோக்ஸும் 3ஆவது விக்கெட்டில் 132 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியை பலமான நிலையில் இட்டனர்.

மத்திய வரிசையில் அணித் தலைவர் ஜொஸ் பட்லர் 27 ஓட்டங்களையும் ஹெரி ப்றூக் 30 ஓட்டங்களையும் பின்வரிசையில் டேவிட் வில்லி 15 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஹரிஸ் ரவூப் 64 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் ஷஹீன் ஷா அப்றிடி 72 ஓட்டங்களுக்கு



2 விக்கெட்களையும் மொஹமத் வசீம் 74 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 43.3 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 244 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது.

பாகிஸ்தானின் கடைசி விக்கெட் ஜோடியான ஹரிஸ் ரவூபும் மொஹமத் வசிமும் இங்கிலாந்துக்கு பெரும் நெருக்கடியைக் கொடுத்தனர்.

38ஆவது ஓவரில் மொத்த எண்ணிக்கை 191 ஓட்டங்களாக இருந்தபோது 9ஆவது விக்கெட் வீழ்த்ததால் பாகிஸ்தான் 200 ஓட்டங்களை நெருங்காது என எண்ண வைத்தது.

ஆனால், ஹரிஸ் ரவூப், மொஹமத் வசிம் ஆகிய இருவரும் 10ஆவது விக்கெட்டில் 53 ஓட்டங்களைப் பகிர்ந்து அசத்தினர்.

அவர்கள் இருவரது இணைப்பாட்டமே பாகிஸ்தான் இன்னிங்ஸில் அதி சிறந்த இணைப்பாட்டமாக அமைந்தது.

ஹரிஸ் ரவூப் 23 பந்துகளில் 3 பவுண்டறிகள், 3 சிக்ஸ்களுடன் 36 ஓட்டங்களையும் மொஹமத் வசிம் ஆட்டம் இழக்காமல் 16 ஓட்டங்களையும் பெற்றனர். அவர்களை விட மற்றொரு பின்வரிசை வீரரான ஷஹின் ஷா அப்றிடி 25 ஓட்டங்களைப் பெற்றார்.

முன்னதாக பாகிஸ்தானின் முதல் இரண்டு விக்கெட்கள் 10 ஓட்டங்களுக்கு சரிந்தன.

எனினும், பாபர் அஸாம் 38 ஓட்டங்களையும் மொஹமத் ரிஸ்வான் 36 ஓட்டங்களையும் அகா சல்மான் 51 ஓட்டங்களையும் பெற்று அணியை சரிவில் இருந்து மீட்டனர்.

பாபர் அஸாமும் மொஹமத் ரிஸ்வானும் 3ஆவது விக்கெட்டில் 40 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

பந்துவீச்சில் டேவிட் வில்லி 56 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் கஸ் அட்கின்சன் 45 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் ஆதில் ரஷித் 55 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் மொயீன் அலி 60 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

# சம்பியன்ஸ் கிண்ண வாய்ப்பை பற்றிப்பிடித்த பங்களாதேஷ்



அவுஸ்திரேலியாவுக்கு எதிராக பூனே மகாராஷ்டிரா கிரிக்கெட் சங்க விளையாட்டரங்கில் நேற்று முன் தினம் சனிக்கிழமை நடைபெற்ற உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் பங்ளாதேஷ் தோல்வி அடைந்த போதிலும் சிறந்த நிகர ஓட்ட வித்தியாச அடிப்படையில் சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட்டில் விளையாடும் தகுதியை உறுதிசெய்துகொண்டது.

இன்றைய போட்டியில் பங்களாதேஷின் வழமையான அணித் தலைவர் ஷக்கிப் அல் ஹசன் விளையாடாததால் அவருக்குப் பதிலாக நஜ்முல் ஹொசெய்ன் ஷன்டோ தலைவராக விளையாடினார்.

அவுஸ்திரேலிய அணியில் மிச்செல் ஸ்டார்க், க்ளென் மெக்ஸ்வெல் ஆகியோருக்குப் பதிலாக ஸ்டீவ் ஸ்மித், சோன் அபொட் ஆகிய இருவரும் இணைத்துக்கொள்ளப்பட்டனர்.

பங்களாதேஷினால் நிர்ணயிக்கப்பட்ட 307 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 44.4 ஓவர்களில் 2 விக்கெட்களை மாத்திரம் இழந்து 307 ஓட்டங்களைப் பெற்று 8 விக்கெட்களால் மகத்தான வெற்றியை ஈட்டியது.

உலகக் கிண்ண கிரிக்கெட் வரலாற்றில் அவுஸ்திரேலியா விரட்டிக்கடந்த மிகப் பெரிய வெற்றி இலக்கு இதுவாகும்.

இந்த வெற்றியில் மிச்செல் மார்ஷ் குவித்த அதிரடி சதம், டேவிட் வோர்னர், ஸ்டீவ் ஸ்மித் பெற்ற அரைச் சதங்களும் அவர்களிடையே பகிரப்பட்ட இரு வேறு இணைப்பாட்டங்களும் பெரும் பங்காற்றின.

இதேவேளை, அவுஸ்திரேலியா 22.4 ஓவர்களுக்குள் வெற்றி இலக்கை கடக்கத் தவறிதால் சம்பியன்ஸ் கிண்ணத்தில் விளையாடும் தகுதியைப் பெறுவதற்கு இலங்கைக்கு இருந்த அற்ப சொற்ப வாய்ப்பு அற்றுப்போனது.

ட்ரவிஸ் ஹெட் (12) மூன்றாவது ஓவரில் ஆட்டம் இழக்க அவுஸ்திரேலிய ஆட்டம் கண்டதுடன் பங்களாதேஷ் மகிழ்ச்சியால் மிதந்தது. ஆனால், பங்களாதேஷின் மகிழ்ச்சி நீடிக்கவில்லை.

டேவிட் வோர்னரும் மிச்செல் மார்ஷும் 2ஆவது விக்கெட்டில் 120 ஓட்டங்களைப் பகிர்ந்து அவுஸ்திரேலியாவைப் பலமான நிலையில் இட்டனர்.

டேவிட் வோர்னர் 53 ஓட்டங்களைப் பெற்று களம் விட்டகன்றார்.

தொடர்ந்து மிச்செல் மார்ஷ், ஸ்டீவ் ஸ்மித் ஆகிய இருவரும் பிரிக்கப்படாத 3ஆவது விக்கெட்டில் 175 ஓட்டங்களைப் பகிர்ந்து அவுஸ்திரேலியாவின் வெற்றியை இலகுவாக்கினர்.

மிக வேகமாகத் துடுப்பெடுத்தாடிய மிச்செல் மார்ஷ் 132 பந்துகளை எதிர்கொண்டு 17 பவுண்டறிகள், 9 சிக்ஸ்கள் உட்பட ஆட்டம் இழக்காமல் 177 ஓட்டங்களையும் ஸ்டீவன் ஸ்மித் ஆட்டம் இழக்காமல் 63 ஓட்டங்களையும் பெற்றனர்.

அப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட பங்களாதேஷ் மிகத் திறமையாக அவுஸ்திரேலிய இழந்து 306 ஓட்டங்களைக் குவித்தது.

முதல் 6 துடுப்பாட்ட வீரர்களும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடியதன் பலனாக பங்களாதேஷ் கணிசமான மொத்த எண்ணிக்கையைப் பெற்றது.

தன்ஸித் ஹசன், லிட்டன் தாஸ் ஆகிய இருவரும் தலா 36 ஓட்டங்களைப் பெற்றதுடன் 76 ஓட்டங்களைப் பகிர்ந்து சிறந்த ஆரம்பத்தை இட்டுக்கொடுத்து 30 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆட்டம் இழந்தனர். (106 - 2 விக்.)

அவர்களைத் தொடர்ந்து நஜ்முல் ஹொசெய்ன் ஷன்டோ, தௌஹித் ரிதோய், மஹ்முதுல்லா ஆகிய இருவரும் 3ஆவது விக்கெட்டில் 64 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியை நல்ல நிலையில் இட்டனர்.

ஷன்டோ 45 ஓட்டங்களையும் ரிதோய் 74 ஓட்டங்களையும் பெற்றனர்.

தொடர்ந்து மஹ்முதுல்லா (32), முஷ்பிக்குர் ரஹிம் (21), மெஹிதி ஹசன் மிராஸ் (29) ஆகியோர் தங்களாலான அதிகப்பட்ச பங்களிப்பை வழங்கினர்.

பந்துவீச்சில் அடம் ஸம்பா 32 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களை வீழ்த்தி உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் தனது மொத்த விக்கெட் எண்ணிக்கையை 22ஆக உயர்த்திக்கொண்டார். அவரை விட சோன் அபொட் 61 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

ரஞ்சன் அருண் பிரசாத்

# ஐசிசி இடைநீக்கம்: இலங்கை கிரிக்கெட் வாரியம் அடுத்து என்ன செய்யும்?

சிறிலங்கா கிரிக்கெட் வாரியத்திற்கு ஐசிசி தடை விதித்தமையானது, தற்போது சர்வதேச மட்டத்தில் பேசுபொருளாக மாறியுள்ளது.

ஆசியக் கோப்பை மற்றும் உலகக் கோப்பை போட்டிகளில் இலங்கை கிரிக்கெட் அணி மிக மோசமான முறையில் விளையாடியிருந்தது. அத்துடன், கடந்த காலங்களில் இடம்பெற்ற போட்டிகளிலும் படுதோல்வியைச் சந்தித்திருந்தது.

இந்நிலையில், சிறிலங்கா கிரிக்கெட் தொடர்பில் இலங்கை முழுவதும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இந்த விவகாரம், இலங்கை நாடாளுமன்றத்தில் நாளொன்றை ஒதுக்கி, விவாதம் நடத்தி சிறிலங்கா கிரிக்கெட்டிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் அளவிற்கு சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

இந்த நிலையிலேயே, சிறிலங்கா கிரிக்கெட் வாரியத்தின் உறுப்புரிமையை இடைநிறுத்துவதற்கு ஐசிசி தீர்மானித்துள்ளது.

சிறிலங்கா கிரிக்கெட் வாரியத்தின் உறுப்புரிமையை உடன் அமலுக்கு வரும் வகையில் கடந்த வெள்ளி முதல் ஐசிசி இடை நிறுத்தியது.

சர்வதேச கிரிக்கெட் வாரியம் வெள்ளியன்று கூடி ஆராய்ந்த போதே இந்தத் தீர்மானத்தை எட்டியுள்ளது.







சிறிலங்கா கிரிக்கெட் வாரியத்தின் நிர்வாகம், அரசியல் தலையீடு ஆகிய காரணங்களே சர்வதேச கிரிக்கெட் வாரியம் சிறிலங்கா கிரிக்கெட்டை தடை செய்யக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா கிரிக்கெட் நிர்வாகத்தில் அரசாங்கத்தின் தலையீடு இல்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என சர்வதேச கிரிக்கெட் வாரியம் தெரிவித்துள்ளது.

**சிறிலங்கா கிரிக்கெட்டை தடை செய்யும் கூட்டத்தில் ஷமி சில்வா**

சிறிலங்கா கிரிக்கெட் வாரியத்தின் உறுப்புரிமையை இடை நிறுத்துவதற்கான தீர்மானத்தை எடுப்பதற்காக ஐசிசி வெள்ளியன்று விசேஷ கூட்டமொன்றை ஏற்பாடு செய்தது.

இந்தக் கூட்டத்தில் இந்தியாவிற்கு தற்போது விஜயம் மேற்கொண்டுள்ள சிறிலங்கா கிரிக்கெட்டின் தலைவர் ஷமி சில்வாவும் கலந்துகொண்டிருந்ததாக பிரபல கிரிக்கெட் இணையதளமான கிரிக் இன்ஃபோ செய்தி வெளியிட்டுள்ளது.

அத்துடன், ஆமதாபாத்தில் எதிர்வரும் நாட்களில் நடைபெறவுள்ள ஐசிசி கூட்டங்களிலும், ஷமி சில்வா கலந்து கொள்ள இருப்பதாகவும் அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இறுதியாக 2014ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரை சிறிலங்கா கிரிக்கெட்டில் இடைக்கால குழுவொன்று செயற்பட்டமைக்கு ஐசிசி அனுமதி வழங்கியிருந்தது.

**சிறிலங்கா கிரிக்கெட் சர்ச்சைக்கான தீர்வுக்காக நியமிக்கப்பட்ட குழுக்கள்**

விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவினால் சிறிலங்கா கிரிக்கெட் வாரியத்திற்கான இடைக்கால குழுவொன்று கடந்த 5ஆம் தேதி நியமிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு இடைக்கால குழுவொன்று நியமிக்கப்பட்டதை அடுத்து, அது நாட்டில் பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தது.

இதையடுத்து, சிறிலங்கா கிரிக்கெட் எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளை ஆராய்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் அமைச்சரவை குழுவொன்று நியமிக்கப்பட்டது.

சிறிலங்கா கிரிக்கெட் வாரியத்தில் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படும் ஊழல், மோசடிகள் மற்றும் நிர்வாக பிரச்னைகளை ஆராய்வதற்காகப் பல குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.



சிறிலங்கா கிரிக்கெட் வாரியத்தை மறுசீரமைப்பு செய்வதற்காக 2017ஆம் ஆண்டு அப்போதைய விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகரவினால் சுயாதீன ஆலோசனை சபையொன்று நியமிக்கப்பட்டது.

இந்த சுயாதீன சபையின் தலைவராக முன்னாள் கிரிக்கெட் குழுவொன்றின் தலைவராக செயல்பட்ட ஹேமக்க அமரசூரிய நியமிக்கப்பட்டிருந்தார்.

அத்துடன், முன்னாள் வீரர்களான மஹேல ஜயவர்தன, குமார் சங்கக்கார, அரவிந்த டி சில்வா, அநுர தென்னக்கோன் ஆகியோர் சபையின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

**கிரிக்கெட்டை மேம்படுத்த பிரபல்யங்கள் அடங்கிய குழு**

சிறிலங்கா கிரிக்கெட் வாரியத்தை மேம்படுத்துவதற்காக 2021ஆம் ஆண்டு அப்போதைய விளையாட்டுத்துறை அமைச்சராக கடமையாற்றிய நாமல் ராஜபக்ஸவினால் தொழில்நுட்ப ஆலோசனை குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவின் தலைவராக அரவிந்த டி சில்வா நியமிக்கப்பட்டதுடன், குழுவின் உறுப்பினர்களாக ரொஷான் மஹநாம, முத்தையா முரளிதரன் மற்றும் குமார் சங்கக்கார ஆகியோர் நியமிக்கப்பட்டிருந்தனர்.

**குசலா சரோஜனி குழு**

கடந்த 2022ஆம் ஆண்டு நடைபெற்ற டி20 உலகக்கோப்பை போட்டிகளுக்காக நியமிக்கப்பட்ட இலங்கை அணி தொடர்பிலும், அதனுடன் தொடர்புடைய விஷயங்கள் குறித்தும் ஆராய்வதற்காக விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவினால் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் குசலா சரோஜனி வீரவர்தனவின் தலைமையிலான ஐவர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டது.

முன்னாள் அமைச்சரின் செயலாளர் கிங்ஸிலி பெர்ணான்டோ, ஓய்வு பெற்ற பிரதி போலீஸ் மாஅதிபர் சுதத் நாகஹமுல்ல, ஓய்வூ பெற்ற ரியர் அட்மிரல் ஆனந்த பீரிஸ், முன்னாள் கிரிக்கெட் வீரர் நலிந்த அல்விஸ், சட்டத்தரணி ஷலனி ரொஷானா பெர்ணான்டோ ஆகியோர் இந்தக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

சிறிலங்கா கிரிக்கெட்டின் தற்போதைய தலைவர் உள்ளிட்ட நிர்வாகத்திற்குப் பதிலாக சிறிலங்கா கிரிக்கெட் வாரியத்தை முன்னோக்கிக் கொண்டு செல்லும் நோக்கில் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவினால் கடந்த 5ஆம் தேதி இடைக்கால குழுவொன்று நியமிக்கப்பட்டது.

இந்த குழுவின் தலைவராக முன்னாள் அணித் தலைவர் அர்ஜுண ரணதுங்க நியமிக்கப்பட்டிருந்தார்.

அத்துடன், ஓய்வூ பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் எஸ்.ஐ.இமாம், ஓய்வூ பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் ரொஹினி மாரசிங்க, ஓய்வூ பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி ஐராங்கணி பெரேரா, எச்.கே. உபாலி தர்மதாஸ, சட்டத்தரணி ரகித்த நிமல ராஜபக்ஸ மற்றும் எம்.எச்.ஜமால்டீன் ஆகியோர் இந்தக் குழுவில் இடம் பிடித்துள்ளனர்.

(மறுபக்கம் பார்க்க)



### கிரிக்கெட் எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளை தீர்ப்பதற்கு அமைச்சரவை குழு

சிறிலங்கா கிரிக்கெட் எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளை தீர்க்கும் வகையில் அமைச்சரவை விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கடந்த 6ஆம் தேதி கூடிய அமைச்சரவை கூட்டத்தின் போது, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் இந்த குழு நியமிக்கப்பட்டது.

இந்த குழுவின் தலைவராக வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி நியமிக்கப்பட்டிருந்தார்.

அத்துடன், அமைச்சர்களான காஞ்சன விஜேசேகர, டிரான் அலஸ், மனுஷ நாணயக்கார ஆகியோர் இந்த அமைச்சரவை குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

சிறிலங்கா கிரிக்கெட் எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளை விரைவில் தீர்க்கும் வகையிலான பரிந்துரைகளை முன்வைக்கும் நோக்கிலேயே இந்தல் குழு நியமிக்கப்பட்டுள்ளது.




### புதிய யாப்பின் பிரகாரம் நியமிக்கப்பட்ட குழு

நாடாளுமன்ற சட்டத்தின் மூலம் சிறிலங்கா கிரிக்கெட் வாரியத்திற்காக புதிய யாப்பொன்றை அறிமுகப்படுத்துவதற்கு ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் கே.ரி.சித்ரசிறி தலைமையிலான 10 பேரை கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இந்த குழுவினால் தயாரிக்கப்பட்ட பரிந்துரைகள் அடங்கிய யோசனை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

உத்தேச புதிய யாப்பு சட்டமூலத்தின் ஊடாக, சிறிலங்கா கிரிக்கெட் நிர்வாகத்தை நியமிக்கும் நடைமுறையை முழுமையாக மாற்றுவதற்கு பரிந்துரை முன்வைக்கப்பட்டதுடன், அதன் உறுப்பினர்கள், நிர்வாகம் மற்றும் முகாமைத்துவத்தில் திருத்தங்களை மேற்கொள்ளவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, உத்தேச புதிய யாப்பின் பிரகாரம், சிறிலங்கா கிரிக்கெட் நிர்வாக சபை 4 வருடங்களுக்கு நியமிக்கப்படுவதுடன், 18 பேரை கொண்ட பணிப்பாளர் சபையின் ஊடாக அதை நிர்வகிப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

கிரிக்கெட் விளையாட்டு தொடர்பிலான கொள்கைகளை வகுப்பதற்கான அதிகாரம் பணிப்பாளர் சபைக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், அந்தக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரம் பணிப்பாளர் சபையின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தயாரிக்கப்பட்டு, ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ள இந்த அறிக்கை, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் உத்தரவிற்கு அமைய, ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால், கிரிக்கெட் விளையாட்டு குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர் அலி சப்ரி தலைமையிலான அமைச்சரவை குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

### நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

சிறிலங்கா கிரிக்கெட் நிர்வாகத்தில் ஊழல் காணப்படுவதாகத் தெரிவித்து, தலைவர் உள்ளிட்ட நிர்வாகத்தைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என நாடாளுமன்றத்தில் ஆளும் மற்றும் எதிர்கட்சியினால் ஒன்றிணைந்த பிரேரணையொன்று கொண்டு வரப்பட்டு, வெள்ளியன்று விவாதம் நடாத்தப்பட்டது.

இந்த விவாதத்தின் பின்னர் நடத்தப்பட்ட இந்த பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

### இலங்கை கிரிக்கெட் தோல்விக்கு சூழ்ச்சியே காரணம் - தேர்வு குழுத் தலைவர் தெரிவிப்பு






இலங்கை கிரிக்கெட் அணியின் தொடர் தோல்விக்கு சூழ்ச்சியே காரணம் என இலங்கை கிரிக்கெட் அணியின் தேர்வு குழுத் தலைவர் பிரமோதய விக்ரமசிங்க தெரிவிக்கின்றார்.

உலகக்கோப்பை போட்டிகளில் தோல்வி அடைந்த பின்னணியில், நாடு திரும்பிய இலங்கை குழு வெள்ளியன்று அதிகாலை கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

இதன்போது, ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்த போதே இலங்கை கிரிக்கெட் அணியின் தேர்வுக் குழுத் தலைவர் பிரமோதய விக்ரமசிங்க இதைக் குறிப்பிட்டார்.

“தோல்வியடைந்தமை கவலையளிக்கின்றது. இலங்கை அணி வீழ்ச்சிக்கு என்ன காரணம் என்பதை நான் இரண்டு தினங்களில் வெளியிடுகின்றேன். ஊடகங்களுக்கு இரண்டு தினங்களின் பின்னர் கதைக்கின்றேன்.

தோல்விக்கான காரணம் என்ன என்பதை அந்த இரண்டு தினங்களில் நன்றாக சிந்தித்துப் பாருங்கள். நாங்கள் திட்டத்துடனேயே சென்றோம். எதிர்காலத்தில் இந்த அணி எவ்வாறு விளையாடும் என்பதைப் பார்க்க முடியும்.

இரண்டு தினங்களில் அனைத்தையும் வெளிப்படுத்துகின்றேன். தோல்விக்கான பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கின்றேன். நான் தப்பிச் செல்ல மாட்டேன். சூழ்ச்சி இருந்ததா, இதை யார் வீழ்ச்சிப் பாதைக்குக் கொண்டு சென்றார்கள், யார் இதை இல்லாது செய்ய முயன்றார்கள் என்ற அனைத்தையும் நான் எதிர்காலத்தில் வெளிப்படுத்துவேன்.

இலங்கை அணியின் தோல்விக்கு ஒரு குழுவின் சூழ்ச்சி காணப்பட்டது. அதை வெளிப்படுத்துவேன்,” என இலங்கை கிரிக்கெட் அணியின் தேர்வுக் குழுத் தலைவர் பிரமோதய விக்ரமசிங்க தெரிவிக்கின்றார்.

### தடை செய்யப்பட்டதன் பின்னர் அடுத்த என்ன நடக்கும்? - விளையாட்டுத்துறை அமைச்சர் பதில்

சிறிலங்கா கிரிக்கெட் தடை செய்யப்பட்டுள்ள நிலையில், அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படுவது குறித்து விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க கருத்து வெளியிட்டுள்ளார்.

சிறிலங்கா கிரிக்கெட்டிற்கு விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவினால் நியமிக்கப்பட்ட இடைக்கால குழுவிற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் 14 நாட்களுக்கு தடை விதித்துள்ளது.

இந்த நிலையில், நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கிக் கொள்ளும் நோக்கில்தான் எதிர்வரும் திங்கட்கிழமை (இன்று) நீதிமன்றத்தை நாடவுள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவிக்கின்றார்.

“நான் திங்கட்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றத்தை நாடவுள்ளேன். அந்த இடத்தில் நியாயத்தை நாங்கள் எதிர்பார்க்கின்றோம். அவ்வாறு இல்லையென்றால், உயர்நீதிமன்றத்தை நாடவுள்ளோம். சட்ட மாஅதிபரின் செயற்பாடுகள் தொடர்பில் எனக்கு நம்பிக்கை இல்லை. நான் எனக்கான சட்டத் தரணிகளை நானே நியமிக்கவுள்ளேன்,” என விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க குறிப்பிடுகின்றார்.

அத்துடன், சர்வதேச தடையை அடுத்து, சிறிலங்கா கிரிக்கெட் வாரியத்தின் நிர்வாகத்தை அர்ஜூண ரணதுங்கவிடம் கையளித்து, 6 மாதங்களுக்குள் புதிய விளையாட்டு சட்டமொன்றை நிறைவேற்றி, நிர்வாகத் தேர்தல் ஒன்றை நடத்த எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் கூறுகின்றார்.

கடந்த 20 வருட காலமாக இலங்கையில் செயற்பட்டு வரும் கிரிக்கெட் சங்கங்களை கலைத்து, புதிய தேர்தல்களை நடாத்தி, கிரிக்கெட் சங்கங்களை மறுசீரமைக்க தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவிக்கின்றார்.

### சிறிலங்கா கிரிக்கெட்டின் எதிர்காலம்?

சிறிலங்கா கிரிக்கெட்டிற்கு சர்வதேச தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், இலங்கை கிரிக்கெட்டின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளதாக பத்திரிகையாளர் ஆர்.யசி தெரிவிக்கின்றார்.

எதிர்கால கிரிக்கெட் சமூகத்திற்கு இந்தத் தடை பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் அவர் கூறுகின்றார்.

சிறிலங்கா கிரிக்கெட் வாரியத்திற்குள் காணப்படுவதாகக் கூறப்படும் ஊழலை முழுமையாக இல்லாது செய்து, சிறிலங்கா கிரிக்கெட்டை சுத்திகரிக்கும் நடவடிக்கைகளைத் தற்போதைய தலைவர்கள் மேற்கொண்டால் மாத்திரமே, இலங்கையின் அடுத்த தலைசிறந்த கிரிக்கெட் தலைமுறையொன்றை உருவாக்க முடியும் எனவும் பத்திரிகையாளர் ஆர்.யசி குறிப்பிடுகின்றார்.

அவ்வாறு இல்லையென்றால், இலங்கையின் அடுத்த கிரிக்கெட் தலைமுறை கேள்விக்குறியாகும் என்பதில் எந்தவித சந்தேகமும் கிடையாது எனவும் அவர் கூறுகின்றார். ●